# இலக்கு

இதழ் 82

அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஜூன் 14, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1




## சுமந்திரன் ஏன் உடனடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்?

பகுதி 02

**திருமதி. மனோன்மணி சதாசிவம்.**
மூத்த சட்டத்தரணி, பிரபல நொத்தாரிசு, பதில் நீதவான், உயர் நீதிமன்றம், வவுனியா

## ஏமாற்று அரசியல்

பி.மாணிக்கவாசகம்





## திருச்சி மத்திய சிறையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் ஈழத் தமிழர்கள்

கல்யாணி

## காலனித்துவ காலச் சின்னங்கள் மட்டுமல்ல காலனித்துவ கால முடிவுகளுக்கும் மறுஆய்வு வேண்டும்

சூ.யோ. பற்றிமாகரன்

பகுதி 01

## தொல்லியல் மரபுரிமை அடையாளங்களை பாதுகாப்பதை அனைவரும் மேற்கொள்ள முடியும்

பேராசிரியர் பரமு புஸ்பரத்தினம்



## கண்ணுக்குத் தெரியாத மனிதரை உருவாக்குதல் சாத்தியமா?

தாரண்யா

# கொழும்பில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன்
## ஊடகவியலாளரின் சடலம்




இலங்கை தலைநகர் கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்திற்கு அருகில் கொழும்பு ரெலிகிராப் என்ற ஊடகத்தின் ஊடக வியலாளர் ரஜீவ ஜெயவர்த்தனா (63) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை(12) காலை சடலம் மீட்கப்பட்டதாக சிறீலங்கா காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். ரஜீவ முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் குடும்ப விமான நிறுவனமாக மிகின் லங்கா என்ற விமான நிறுவனத்தின் பணிப்பாளராக பணியாற்றியிருந்தார்.

அப்போது இடம்பெற்ற ஊழல்கள் தொடர்பில் ஊடகங்களில் இவர் எழுதி வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது. இவர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட பின்னர் சடலம் சுதந்திர சதுக்கம் பகுதிக்கு கொண்டு வரப்பட்டு போடப்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

பிரேத பரிசோதனையில் அவர் துப்பாக்கியால் சுடப்பட்டுள்ளது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# 'ஜனாதிபதி செயலணி' – கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் ஓர் புதிய பரிணாமம்
## -தமிழர் மரபுரிமை பேரவை



கிழக்கில் தொல்லியல் மரபுரிமைகளை பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணியானது கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பின் ஓர் புதிய பரிணாமம் என தமிழர் மரபுரிமை பேரவை கண்டனம் வெளியிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் பேரவை மேலும் தெரிவித்துள்ளதாவது, இலங்கையின் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ச கிழக்கில் தொல்லியல் மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக 11 பேர் கொண்ட ஜனாதிபதி செயலணியை கடந்த ஆனி 2 ஆம் திகதி நியமித்திருக்கிறார்.

முற்றுமுழுதாக பெரும்பான்மையினரை கொண்டமைக்கப்பட்ட ஜனாதிபதி செயலணி இலங்கையின் பல்லினத்தன்மையை பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. இச்செயலணி நியமன விவகாரத்தினை, சிங்கள அரசின் சிங்கள-பௌத்த மயமாக்கல் (வடக்கு-கிழக்கு) அரசியல் நிகழ்ச்சி நிரலின் நீட்சியாகவே நோக்க வேண்டியுள்ளது.

ஈழத் தமிழர்களின் பாரம்பரிய தாயக பூமியான வடக்கு-கிழக்கை துண்டாடி, தமிழ்த் தேச தாயக கோட்பாட்டை சிதைக்கும் அரசியல் செயற்பாடுகளை, ஏற்கனவே சிங்கள அரசு தொடங்கி காலம் காலமாக வெவ்வேறு உத்திகளைப் பயன்படுத்தி தமிழர் நிலத்தை அபகரித்து வருகின்றது.

தமிழர்நிலத்தைஅபகரிப்பதோடல்லாமல் தமிழர் மரபுரிமைகளை அழித்து திரிபுபடுத்தி சிங்கள-பௌத்த வரலாற்றியலையும், பூர்வீகத்தையும் வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவது எமக்குத் தெரியாததல்ல.

இச்செயலணி முற்றுமுழுதாக சிங்களவர்களை கொண்டமைந்திருப்பது தமிழர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கவில்லை என்பது கண்கூடு.

இச்செயலணியில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகள் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை அச்செயலணியின் விடய நோக்கத்தை மாற்றாது என்பதோடு தமிழ், முஸ்லிம் நியமனங்கள் பெரும்பான்மை சனநாயகத்தை வலுப்படுத்தும் செயற்பாடாக அமைந்து விடும் என்பதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டும். தமிழ், முஸ்லிம் ஓரிரு பிரதிநிதித்துவங்கள் பெரும்பான்மை ஜனநாயகத்தின் அடிப்படையை ஒரு போதும் மாற்றப் போவதில்லை.

இலங்கையின்தலைநகரைமையப்படுத்தி எடுக்கப்படும் முடிவுகள் அதிகாரக் குவிவுமையம் ஒற்றையாட்சியில் தொடர்ந்தும் கொழும்பை மையப்படுத்தியே இருக்கும் என்பதுடன் அதிகாரப் பரவலாக்கத்திற்கான சனநாயக வெளியை இல்லாமற் செய்கின்றதென்றே கொள்ள வேண்டியிருக்கின்றது.

இது தொடர்பில் முஸ்லிம்களை தமிழர்களிடமிருந்து அந்நியப்படுத்தும் அரச நிகழ்ச்சி நிரலுக்குள் முஸ்லிம் மக்கள் உள்வாங்கப்பட்டு விடக் கூடாது என்பது எமது கோரிக்கையாக இருக்கின்றது.

இன்னொரு தந்தோராபாயத்தை சிங்கள அரசு ஈழத்தமிழர் மீதும் முஸ்லிம்கள் மீதும் கட்டவிழ்த்திருக்கின்ற நிலையில், வரலாற்றுத் தவறுகளுக்கு மீண்டும் இடமளிக்காது, இதற்கு எதிராக கூட்டாக ஒன்றிணைந்து போராட தமிழர் மரபுரிமைப் பேரவை அழைப்பு விடுக்கின்றது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொல்பொருள் ஆய்வு செயலணி நிறுத்தப்பட வேண்டும்
## –போரதீவுப்பற்று பிரதேச சபையில் தீர்மானம்



கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படவுள்ள தொல்பொருள் ஆய்வுக்கென நியமிக்கப்பட்டுள்ள செயலணிக்கு எதிராக கண்டன தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுடன்செயலணியைஜனாதிபதிஇடைநிறுத்த வேண்டும் என்ற தீர்மானம் மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

போரதீவுப்பற்று பிரதேசசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் யோ.ரஜனியின் தலைமையில் வெள்ளிக்கிழமை (12) நடைபெற்றது.

நாட்டில் எந்த ஒரு மாகாணத்திலும் தொல்பொருள்ஆய்வுக்குழு அமைக்காமல்தமிழ்மொழி பேசும் இனத்தவர் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டமையும் அதுவும் பெரும்பான்மை சிங்கள மொழியை சேர்ந்தவர்களை மாத்திரம் நியமித்தமையும் மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தி வருவதாக இங்கு தவிசாளரினால் சுட்டிக் காட்டப்பட்டது.

இதற்கெதிராக தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என தவிசாளர் யோ.ரஜனியினால் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. இந்த தீர்மானம் சபை உறுப்பினர்களினால் கட்சி பேதமின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

# சிறீலங்காவுக்கு சீனா மேலும் உதவிகள்

சிறீலங்காவில் உள்ள சீன சபை விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக சீனாவில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் சிறீலங்காவுக்கு பெருமளவான கொரோனா வைரஸ் பாதுகாப்பு உபகரணங்களை வழங்கியுள்ளது.

308,600 முகக் கவசங்கள், 1,600 முகப் பாதுகாப்பு அங்கிகள், 2,400 கண் பாதுகாப்பு உபகரணங்கள், 400 உடல் பாதுகாப்பு அங்கிகள் ஆகியவற்றை பீஜிங்கை தளமாகக் கொண்ட சீன மக்கள் சபை வழங்கியுள்ளது.

சீன அரசும், சீன மக்களும் சிறீலங்கா அரசுக்கு தொடர்ந்து உதவிகளை வழங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

# சிறீலங்காவின் ஏற்றுமதித்துறை பாரிய வீழ்ச்சி

கொரோனா வைரசின் தாக்கத்தை தொடர்ந்து சிறீலங்காவின் ஏற்றுமதித்துறை இந்த வருடம் பாரிய வீழ்ச்சியை சந்தித்துள்ளது.

ஏற்றுமதித் துறையானது முதலாவது காலாண்டில் 16 விகிதம் வீழ்ச்சி கண்டுள்ளது. தொழிற்சாலைஉற்பத்தி பொருட்களின்ஏற்றுமதி 14.4விகிதமும்,விவசாயஉற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதி 21.8 விகிதமும் வீழ்ச்சி கண்டுள்ளது. அதேசமயம், தேயிலை உற்பத்தித்துறையும் கடும் பாதிப்பை சந்தித்துள்ளது. அது 22 விகித வீழ்ச்சியடைந்துள்ளது.

# மத அடிப்படையில் சிறுபான்மை மக்கள் மீது இலங்கையில் வன்முறை தொடர்கின்றது



மத அடிப்படையில் சிறுபான் மையின மக்கள் மீது இலங்கை அரசால் திட்டமிட்ட பாகுபாடு தொடர்ச்சியாக காண்பிக்கப்பட்டு வருவதாக சர்வதேச மத சுதந்திரம் தொடர்பான அறிக்கையில் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ஐக்கிய அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் மைக் பொம்பியோவினால் வெளியிட்டு வைக்கப்பட்ட 2019ஆம் ஆண்டுக்கான சர்வதேச மதச் சுதந்திரம் தொடர்பான அறிக்கையிலேயே இவ்விடயம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், இலங்கை அரசு சிறுபான்மையின மக்கள் மீதான திட்டமிடப்பட்ட பாகுபாட்டைக் காண்பிப்பதாகச் சிறுபான்மையின மதக் குழுக்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூறியுள்ளனர்.

சிறுபான்மையின மக்கள் மீது மத ரீதியாக முடுக்கி விடப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக அரச அதிகாரிகளோ அல்லது காவல்துறை அதிகாரிகளோ அக்கறை செலுத்தவில்லை என அமெரிக்காவின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கோவிட்–19 – இறப்பு எண்ணிக்கை 430,813 ஆக அதிகரிப்பு



கொரோனா வைரசின் தாக்கத்தினால் இதுவரை உலகில் 430,813 பேர் இறந்துள்ளதுடன், 7,829,293 பேர் பாதிக்கப் பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களில் 4,016,168 பேர் குணமடைந்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட நாடுகளில் அதிக மக்கள் மரணித்த நாடுகளின் விபரம்:

அமெரிக்கா 117,426 பேர், பிரேசில் 42,055 பேர், பிரித்தானியா 41,662, இத்தாலி 34,301 பேர், ஸ்பெயின் 29,398 பேர், பிரான்ஸ் 27,136 பேர், மெக்சிகோ 16,448 பேர், ஜேர்மனி 8,867 பேர், இந்தியா 9,205 பேர், ரஸ்யா 6,829 பேர்.

# காரைதீவு பிரதேச சபையின் தீர்மானம் வடக்கு கிழக்கு எங்கும் எதிரொலிக்குமா?



சிறீலங்கா அரசு தொடர்ந்து மேற்கொண்டு வரும் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பின் தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் அரச தலைவர் செயலணிக்குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. முழுக்க முழுக்க சிங்களவர்களையும், ஐக்கிய நாடுகள் சபையினால் இனங்காணப்பட்ட போர்க் குற்றவாளிகளையும் கொண்ட இந்த குழுவின் செயற்பாடுகள் என்னவாக இருக்கும் என தமிழ் மக்கள் நன்கு அறிந்ததே.

கிழக்கில் உள்ள தமிழ் இனத்தின் தொன்மங்களை அழிப்பது அல்லது அந்த இடங்களை சிங்கள இனம்சார் வரலாறாக மாற்றுவது. அதன் மூலம் அங்கு ஏற்படுத்தப்படும் சிங்களக் குடியேற்றங்களுக்கு புதிதாக சிங்கள வரலாறு ஒன்றை எழுதுவது தான் இந்த குழுவின் நோக்கம். அதன் விளைவு என்பது தமிழ் இனம் தனது வரலாற்றை தொலைத்து நிலங்களையும் இழப்பதுடன் தாயகம் என்ற எமது கொள்கைகளும் அழிந்து போய்விடும்.

எனவே இந்த நடவடிக்கைக்கு எதிராக தமிழ் இனம் தயாகத்திலும், புலத்திலும் தனது எதிர்வினையை ஆற்ற வேண்டும்.

அதற்கு முன்மாதிரியாகவே சிறீலங்கா அரசின் இந்த நடவடிக்கைக்கு எதிராக கிழக்கு மாகாணத்தில் உள்ள காரைதீவு பிரதேச சபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

காரைதீவு பிரேதச சபையின் 28 ஆவது மாதாந்த அமர்வு சபையின் தவிசாளர் கிருஸ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் கடந்த வியாழக்கிழமை(11) கூடிய போதே இந்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அமைக்கப்பட்டுள்ள அரச தலைவர் செயலணி குழுவின் நடவடிக்கைகளுக்காக தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இடங்கள், தமிழர் தாயகப் பிரதேசங்களின் இடங்கள். அவை திட்டமிட்டு அடையாளப்படுத்தப்பட்டுள்ளமை திட்டமிட்ட பௌத்தமயமாக்கல் நடவடிக்கையாகும் என தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்கள் அதிகம் வாழும் கிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக நிலங்கள் பறிபோகும் நிலையில் உள்ளன. அம்பாறை மாவட்டத்தில் தான் அதிக இடங்கள் தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இது தமிழ் சமூகத்தை திட்டமிட்டு அழிக்கும் செயலாகும் என சபை உறுப்பினர் ஏ.ஆர் மொகமட் பஸ்மீர் இந்த பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.

முஸ்லீம் பிரதிநிதிகளை கொண்டுள்ள இந்த சபை, சிறீலங்கா அரசின் பௌத்த மயமாக்கலுக்கு எதிராக தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது. இதனை பின்பற்றி வடக்கு கிழக்கில் உள்ள ஏனைய சபைகளும் தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டும் என்பதுடன், வடக்கு கிழக்கில் உள்ள தமிழ் அரசியல் கட்சிகளும் சிறீலங்கா அரசின் இனஅழிப்புக்கு எதிராக நடவடிக்கைகளை துரித கதியில் மேற்கொள்ள வேண்டும்.

புலம்பெயர் தமிழ் சமூகமும், தமிழ் இனத்தின் இருப்பையும், தாயகக் கோட்பாட்டையும் காப்பாற்ற முன்வர வேண்டும்.

இலக்கு

# எழுச்சிகள் தொடரப்பட்டாலே வீழ்ச்சிகள் வளர்ச்சிகளாகும்

ஒவ்வொரு ஆண்டும் மே 18 முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புத் தினம் வருகின்ற பொழுது உலகெங்கும் அந்நாளை ஈழத்தமிழர்கள் சிறீலங்காப் படைகளால் இனஅழிப்புக்கு உள்ளாக்கப்பட்ட தினமாகக் கருதும் பழக்கம் பெரு வழக்காகி வருகிறது. மனச்சாட்சி உள்ள மனித உரிமை ஆர்வலர்கள், உலக அமைதி, உலகின் பாதுகாப்பு என்பவற்றில் அக்கறை உள்ள அரசியல் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், அரசியல் திறனாய்வாளர்கள், ஆன்மிகத் தலைவர்கள் எனப் பல்வேறு நிலைகளில் பல்வேறு ஆளுமைகளில் உள்ள பலராலும் மே18 தமிழின அழிப்பு குறித்து வெளிப்படையாகவே பேசியும் எழுதியும் வருகின்றனர். இவர்களை தாக்கி எழுதுவதாலும் இவர்களுக்கு எதிரான சிங்கள பௌத்த எதிர்ப்பலைகளை வேகப்படுத்துவதாலும் உலகின் மனச்சாட்சியின் குரலை அடக்கும் தனது அனைத்துலக செயற்திட்டத்தை சிறீலங்கா எத்தனையோ வழிகளில் முன்னெடுத்து வருகிறது.

இந்த வகையில் தான் அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர் பெருமதிப்புக்குரிய முனைவர் ஹக் மெக்டெர் மோட் (Rt.Hon. Dr. Hugh McDermott M.P) அவர்கள் மே18 முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்புத் தினத்தையொட்டி விடுத்த அறிக்கையில் சிறீலங்காவின் அந்த ஈழத்தமிழின அழிப்பினை வன்மையாகக் கண்டித்தமை கண்டு அவருக்கெதிரான சிங்கள பௌத்த பேரினவாத எதிர்ப்பு அலை ஒன்றை உருவாக்கினர். இதனைக் கண்டு உலகெங்கும் வாழும் ஈழத்தமிழினப் புலம்பெயர் சமுதாயத்தினர் குறிப்பாக இளையவர்கள் விரைந்து வெகுண்டெழுந்து மெய்நிகர் வழியில் அவருக்கு ஆதரவைத் திரட்ட முயன்ற பொழுது எதிர்பார்த்ததை விடப் பல்லாயிரம் அதிகமாக ஆதரவுப் பேரலை எழுந்தது. இதனால் மகிழ்வடைந்த அவுஸ்திரேலியா நாடாளுமன்ற உறுப்பினர் பெருமதிப்புக்குரிய முனைவர் ஹக் மெக்டெர் மோட் அவர்கள் மேலும் தெளிவாகவும் உறுதியாகவும் சிறீலங்காவின் ஈழத்தமிழின அழிப்பின் கொடுமைத்தனம் குறித்து உலகுக்கு மீளவும் எடுத்துரைத்துள்ளார்.

அவரைப் போலவே ஈழத்தமிழர்கள் இனஅழிப்புச் செய்யப்பட்டமை குறித்துக் குரல் எழுப்பியவர்களுக்குச் சிறீலங்கா பல்வேறு தொல்லைகளை விளைவித்த சூழ்நிலையில் அவற்றையே தங்களுக்கான ஊக்க சக்தியாகக் கொண்டு அவுஸ்திரேலியாவில் மட்டுமல்ல பிரித்தானியா உட்பட கனடா ஈறாக ஈழத்தமிழர் குடிமக்களாக வாழும் நாடுகளில் எல்லாம் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மனித உரிமைகளுக்காகவும் அமைதிக்காகவும் பாடுபடும் பலரும் சிறீலங்காவின் மே18 முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு தினம் உலகின் இனஅழிப்பு நாளாகவே வரலாற்றில் பதிவாகிவிட்டதென்பதை விளக்கிப் பேசவும் அறிக்கை விடுக்கவும் செய்தனர்.

இந்த உலகின் மே18 தமிழின அழிப்புத் தினம் தான் என்பதை மேலும் உறுதிப்படுத்தக் கூடிய முறையில், கனடாவில் "தமிழின அழிப்பு கல்வி வாரம் ஒவ்வொரு ஆண்டும் மே18 இறுதி நாளாக அமையக் கூடிய வகையில் கொண்டாடப்பட வேண்டும் என்னும் 104ம் இலக்க மசோதா அமைந்துள்ளது. இம்மசோதா ஐக்கிய நாடுகள் சபையின் தரவுகளின் அடிப்படையில் 40000முதல் 75000 வரையான தமிழர்கள் கொல்லப்பட்டனர் எனவும் மற்றைய மதிப்பீடுகள் 146,679 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளதுடன் மே18க்கு முன்னதான பல தசாப்பதங்களாக சிறீலங்கா செய்த பல்வேறு ஈழத்தமிழின அழிப்புகளையும் கவனத்தில் எடுத்தாலே ஈழத்தமிழின அழிப்புக் குறித்த முழுமையை உணரலாம்" எனவும் எடுத்துரைத்துள்ளது. இவை உலகின் மிகமோசமான இனஅழிப்புத் தினங்களில் ஒன்றாக சிறீலங்காவின் மே18 தமிழின அழிப்பை வரலாறு முன் எடுக்கும் என்பதை மேலும் உறுதி செய்கிறது.

இத்தகைய ஈழத்தமிழர் உரிமைகள் குறித்த எழுச்சிகள் உலகில் ஏற்படும் பொழுது அவற்றைக் கண்டு மகிழ்ந்து பெருமை பேசுவதற்கு அப்பால் எழுச்சிகள் தொடர்ச்சியாவதற்கு ஏற்ற வகையில் உண்மைகளை வெளிப்படுத்தக் கூடிய கட்டமைப்புக்களை உருவாக்கி உழைப்பதே வீழ்ச்சிகள் வளர்ச்சிகளாவதற்கான வழியாக அமையும். இதனை ஒவ்வொரு தமிழனும் நன்கு உணர்ந்து உணர்ச்சியால் உண்மைகளை உரைத்து உணர்வால் அவற்றுக்கான தீர்வுகள் கிடைக்க தன்னலமற்ற முறையில் தமக்குள் உள்ள வேறுபாடுகளை மதித்து இலட்சியத்தில் ஒன்றிப்புடனும் ஒருமைப்பாட்டுடனனும் செயற்பட வேண்டிய காலமிது.

– ஆசிரியர்



# சுமந்திரன் ஏன் உடனடியாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட வேண்டும்?

**திருமதி. மனோன்மணி சதாசிவம்.** மூத்த சட்டத்தரணி, பிரபல நொத்தாரிசு, பதில் நீதவான், உயர் நீதிமன்றம், வவுனியா

**பகுதி 02**

திரு சுமந்திரன் தன்னை மீண்டும் மீண்டும் தலைமைத்துவ ஆற்றல் கொண்டவரோ அல்லது தனது சொந்த மக்களை பிரதிநிதித்துவப் படுத்தும் திறன் கொண்டவரோ இல்லை என்பதை நிரூபித்து வருகிறார். ஒரு தலைவராக அல் லது மக்கள் பிரதிநிதியாக இருப்பதற்கான மிக அடிப்படையான தகமை, தனது சொந்த கருத்துக்களை ஒதுக்கி வைத்து, தன்னையோ தான் சார்ந்த கட்சியையோ நம்பி வாக்களித்த மக்களின் அபிலாசைகளுக்கு பிரதிநிதித்துவப்படுத்துவதே ஆகும்.

எது எப்படி இருப்பினும் திரு சுமந்திரன் தனக்கு வாக்களித்த மக்களின் கருத்துக்களை பற்றி எள்ளவவு கூட கவலைப்படாமல், தனது தவறான சொந்த கருத்துக்களை மட்டுமே தெரிவித்து வருவதுடன், அதனை மக்களிடம் திணிக்க முற்படுவதும் சகிக்க முடியாதது.

மிக சமீபத்தில், 08 மே 2020 அன்று, திரு சுமந்திரன், முன்னாள் ஊடக இயக்குநராக இருந்த திரு சமரவிக்ரமவுடனான சிங்கள பேட்டியில் கூறிய கருத்துக்களால் அவரது சொந்தக் கட்சியினர் உட்பட தமிழ் அரசியல் வட்டாரம் முழுவதும் கொதிப்படைந்துள்ளது யாவரும் அறிந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உருவாக்கம் குறித்து அவர் அப்பட்டமாக பொய் சொன்னார், மேலும் தமிழர்களின் ஆயுத விடுதலைப் போராட்டத்தையும் கொச்சைபடுத்தினார். மேலும் வடகிழக்கு முழுவதும் தமிழர்களிடையே பரவலான கோபத்தையும் சீற்றத்தையும் தூண்டிய இலங்கையின் சிங்கக் கொடி மற்றும் தேசிய கீதத்தை தான் ஏற்றுக் கொள்கிறேன் என்று கூறியதானது அவரது சொந்தக் கட்சியில் உள்ள சக சட்டமன்ற உறுப்பினர்களிடமிருந்து கூட விமர்சனங்கள் ஏற்பட காரணமாகியது.

இது போலவே, 2015 ஆம் ஆண்டில் அவர் சண்டே லீடரில் ஆங்கிலத்தில் தனது கட்சிக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விசுவாசம் இல்லை என்றும் அவர்களின் சித்தாந்தத்திற்கு உடன் படவில்லை என்றும் கூறியிருந்தார்.

மேலும் தமது கட்சி 'பயங்கரவாதத்திற்கு' ஆதரவளித்தில்லை என்று தெரிவிததன் மூலம் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்ற கருத்தை மறைமுகமாக வழங்கியிருந்தார். திரு சுமந்திரன் தமிழ் புலம்பெயர்ந்த அமைப்புகளிடமிருந்து தன்னைத் தூர விலக்கிக் கொண்டதாக காட்டிக்கொண்டு, "புலி ஆதரவு புலம்பெயர்ந்தோருடன் தனக்கு எந்த தொடர்பும் இல்லை" என்று அவர் கூறியது புலம்பெயர்ந்த தமிழரை கடுமையாக புண்படுத்தியது.

திரு சுமந்திரானுக்கு கடுமையான எதிர்ப்பு அதிகரிக்கத் தொடங்கிய போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் திரு ஆர். சம்பந்தன் தன்னைப் பாதுகாத்துக் கொள்ள ஒரு பத்திரிகை அறிக்கையை வெளியிட்டார். நான் சுமந்திரனின் சிங்கள நேர்காணலை முழுமையாக பார்க்கவில்லை எனினும், "இது அவரது தனிப்பட்ட கருத்து தமிழ் தேசிய கூட்டணியின் அல்லது இலங்கை தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடாக கருதப்படக்



கூடாது" என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

மேலும், திரு சம்பந்தனின் சொந்தக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டணியின் மூத்த உறுப்பினர்கள், பிற தமிழ் கட்சிகளின் தலைவர்கள் திரு சுமந்திரனைப் போலல்லாமல், தமிழீழ விடுதலைக்கான புலிகளின் ஆயுதப் போராட்டம் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்குவதற்கான காரணங்களுடன் நீண்டகால தொடர்பினைக் கொண்டவர்கள். அவர்கள் திரு சுமந்திரனின் நடவடிக்கைகள் மற்றும் கருத்துக்களுக்கு எதிராக தங்கள் கவலையையும் அதிருப்தியையும் வெளிப்படுத்தியுள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் முக்கிய பதவிகளை வகிக்கும் திரு சுமந்திரனின் கருத்துக்கள் அவரது சொந்த கருத்தாக கருதி விட்டு விட கூடாது என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

தமிழரசுக் கட்சி தலைவர் திரு மாவை சேனதிராஜா "புலிகளின் ஆயுதப் போராட்டத்தை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது" என்று திரு சுமந்திரன் கூறிய கருத்துக்களை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது என தெரிவித்தார்.

சக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சட்ட மன்ற உறுப்பினர் திரு ஈஸ்வரபதம் சரவணபவன், "மனிதகுலத்திற்கு எதிரான செயல்களில் பங்கேற்கவோ அல்லது ஈழப் போராட்டத்தை கேலி செய்யவோ ஒரு தளமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அல்லது இலங்கை தமிழரசுக் கட்சியை பயன்படுத்த அனுமதிக்க முடியாது" என்று கூறினார். அவர் திரு சம்பந்தனிடம் திரு சுமந்திரனை அவரது பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

ஜனாதிபதி சட்டத்தரணியும், புகழ்பெற்ற வழக்கறிஞரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு மாவட்டக் கிளையின் தலைவருமான திரு கே. வி. தவரசா கூறுகையில், "திரு சுமந்திரனுக்கு ஆயுதப் போராட்டத்தை கொச்சைபடுத்த அதிகாரம் இல்லை. திரு சுமந்திரன் அத்தகைய கருத்தை வெளிப்படுத்துவது குணப்படுத்த முடியாத காயங்களை உருவாக்கி தமிழ் மக்களின் இதயங்களில் வலியை ஏற்படுத்தியுள்ளது" என மேலும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்றொரு முன்னாள் சட்டமன்ற உறுப்பினரான திரு சார்லஸ் நிர்மலநாதன் திரு சம்பந்தனிடம் "சுமந்திரனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளர் நிலையிலிருந்து நீக்க வேண்டும் மற்றும் புலிகளின் ஆயுத போராட்டம் தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்க அனுமதிக்கக் கூடாது" என கேட்டுக் கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் தமிழீழ விடுதலை அமைப்பின் (டெலோ) தலைவர் திரு செல்வம் அடைக்கலநாதன், "திரு சுமந்திரனின் கருத்துக்கள் முற்றிலும் மன்னிக்க முடியாதவை, முழு ஆயுத தமிழ் போராட்டமும் தவறானது என்று சொல்வது முற்றிலும் மன்னிக்க முடியாதது" என்றார்.

மற்றொரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினரும் தமிழீழ மக்கள் விடுதலை அமைப்பின் (PLOT) தலைவருமான திரு தர்மலிங்கம் சித்தார்த்தன் "திரு சுமந்திரன் ஆயுதப் போரா ட்டத்தின் வரலாறு தெரியாமல் பேசுகிறார்" என்றார்.


மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழரசுக் கட்சி முன்னாள் எம். பி. யான திரு ஞானமுத்து சிறினேசன், "திரு சுமந்திரனின் கருத்துக்களுக்கு தீர்வு காணும் பொறுப்பான நடவடிக்கை எடுக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை வலியுறுத்தினார். அவர்களின் ஊடக செய்தித் தொடர்பாளரான திரு சுமந்திரனின் கருத்துக்களுக்கு தமிழ்த் தேசியக் கட்சி பொறுப்பு, சிங்கள பேரினவாதிகளை மகிழ்விப்பதற்கான சுமந்திரன் தெரிவித்த கருத்துக்களுக்காக அவர் தண்டிக்கப்பட வேண்டும்," என்று அவர் மேலும் கூறினார்.

முன்னாள் தமிழரசுக் கட்சி இளைஞர் பிரிவு தலைவரும், தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தற்போதைய தலைவருமான திரு வி. சிவகரன் கூறுகையில், "திரு சுமந்திரன், வடக்கில் ஒரு கதையையும், தெற்கில் மற்றொரு கதையையும், தமிழில் ஒரு கதையையும், சிங்கள மொழியில் மற்றொரு கதையையும் சொல்லி அரசியலை வணிகமயமாக்கியுள்ளார்" என கூறினார். அவர் மேலும் "அவ்வப்போது சந்தர்ப்பவாதிகள் தமிழ் தரப்பில் உருவாகிக் கொண்டு தான் இருக்கிறார்கள்" என தெரிவித்தார்.

தமிழ் தேசிய கூட்டணியை விட்டு பலர் விலகிச் செல்ல சுமந்திரனே காரணமாக இருந்துள்ளார். மக்களுக்காக கட்சியா? அல்லது கட்சிக்காக மக்களா? என்பது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டணி உறுதியான நிலை எடுக்கவேண்டிய காலம் வந்து விட்டது.

**தொடர்ச்சி 05பக்கம்**

## சுமந்திரன் ஏன் ... தொடர்ச்சி...



சட்டத்தரணி மற்றும் தமிழரசுக் கட்சி இளைஞர் பிரிவின் துணைத் தலைவரான எஸ். தினேசன், "வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் வாக்குகளை தமிழ் தேசிய கூட்டணி பெற்றது. எனவே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடக செய்தித் தொடர்பாளர், இதுபோன்ற கருத்துக்களை வெளியிடுவது ஒருபோதும் ஏற்றுக் கொள்ளப்படாது. இதுபோன்ற கருத்துக்களை நான் முழுமையாக கண்டிக்கிறேன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் நிச்சயமாக இது குறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தெரிவித்தார். முன்னாள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாண சபை உறுப்பினர் திரு டி. ரவிகரன் "தமிழ் மக்கள் சுமந்திரனின் கூற்றை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். இது விடுதலைப் போராட்டத்தையும் அதில் பங்கு பற்றி மடிந்த மற்றும் அங்கவீனமானவர்களையும் ஏன் தலைவர் பிரபாகரனைக்கூட அவமதிக்கும் செயலாகும்" என கூறினார்.

அவர் மேலும் "தமிழ் தலைவர்களுக்கு எதிரான அட்டூழியங்களை எதிர்த்து தமிழ் தலைவர்கள் பல வழிகளில் போராடினர். தமிழர்களின் அடக்குமுறைக்கு எதிரான போராட்டத்தை அகிம்சைவழி முறைகளால் தீர்க்க முடியாது என்பது தெளிவாகத் தெரிந்தது. தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராட இளைஞர்கள் ஆயுதங்களைத் தூக்க தொடங்கியதையடுத்து புலிகள் இயக்கம் உருவாக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை அனைத்து தமிழ் மக்களும் ஏற்றுக் கொண்ட நிலைமையே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை நிறுவ உதவியது. எனவே ஆயுதப் போராட்டத்தையோ அல்லது ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களையோ யாராவது இழிவுபடுத்தும் போது தமிழ் மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதை நான் மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன்" என தெரிவித்தார்.

சிறீசார்பு டெலோவின் பொதுச் செயலாளர் திரு பரராஜசிங்கம் உதயராசா, திரு சுமந்திரன் முழு ஆயுதப் போராட்டத்தையும் நிராகரித்த கருத்துக்களை கண்டித்ததுடன், "திரு சுமந்திரனின் கருத்துக்களுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவர்மீது நடவடிக்கை எடுக்குமா?" என்று கேட்டுள்ளார்.

"புலிகளின் அரசியல் மற்றும் ஆயுத வழிமுறைகளை நிராகரித்த, திரு சுமந்திரனின் கருத்துக்களால் நான் ஆச்சரியப்பட்டேன்" என வடக்கு மாகாணத்தின் முன்னாள் முதல்வர் தலைமை நீதியரசர் சி வி விக்னேஸ்வரன் கூறினார். "தம்பி பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் எம்.பி.யாக அவர் எப்படி இருக்க முடியும்? என்னுடைய முன்னாள் மாணவர் என்ற முறையில், அவரது கருத்துக்கள் எனக்கு பெரும் அவமானத்தைத் தருகின்றன, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானதற்கான காரணம் தமிழ் மக்கள் மட்டுமல்ல, சிங்கள மக்களும் நன்கு அறிந்ததே" எனவும் அவர் தெரிவித்தார்.

அவர்மேலும் "தமிழர்களுக்குசுயாதீனமான ஜனநாயக உரிமைகளைப் பெறுவதற்கான அபிலாசைகளுடன் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுதியற்ற தன்மையின் அறிகுறிகளைக் காட்டுகிறது. திரு சுமந்திரனுக்கு கட்சியைச் சுற்றியுள்ள வரலாறு தெரியாது! அல்லது அவர் தெரியாது என்று பாசாங்கு செய்கிறாரா? அவர் விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கட்சியின் செய்தித் தொடர்பாளர் என்பதை அவருக்கு நினைவூட்ட வேண்டும். திரு சுமந்திரன் ஒரு ஊழியரைப் போல நடத்தப்படுவதில் பெருமிதம் கொள்ளலாம், ஆனால் தமிழர்கள் சார்பாக பேசும் போது அவருக்கு அவ்வாறு செய்ய அவருக்கு உரிமை இல்லை. கொழும்பில் வசதியாக வாழ்ந்தபின், தமிழ் மக்களின் போராட்டத்தை குறைத்து மதிப்பிடுவதற்காக வடக்கு மற்றும் கிழக்குநோக்கி திரும்புவதற்கு அவருக்கு எந்த உரிமையும் இல்லை" என தெரிவித்தார்.

நீதியரசர் மேலும் கூறுகையில், "தமிழ் மக்களின் போராட்டங்களையும் கோரிக்கைகளையும் கேட்டு அவர்களின் கவலைகளுக்கு குரல் கொடுப்பது முக்கியம். இல்லையென்றால், அவர் அரசியலில் இருந்து விலகி இருக்க வேண்டும் அல்லது சிங்கள மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் கட்சியில் இணைந்து போட்டியிட வேண்டும். நாங்கள் எமது விடுதலைப் போராட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி சிங்கள மக்களுக்கு எங்கள் தேவைகளை உணர்த்த வேண்டும் தம்பி பிரபாகரன் ஆயுதமேந்தி பேராட்டத்தை தொடர வேண்டியதன் அவசியத்தைப் புரிந்து கொள்ளும் பல சிங்கள மக்கள் உள்ளனர். தெற்கில் சிங்களதலைவர்கள் போராட்டங்கள் மற்றும் தமிழ் மக்களின் நீதிக்கான தேவை பற்றி பேசுகிறார்கள். தமிழரின் விடுதலைப் போராட்டத்தையும், இது வரை செய்த தியாகங்களையும் குறைக்கும் எந்த முயற்சிகளையும் நாம் அகற்ற வேண்டும். சிங்கள மொழியில் என்னிடம் (விக்னேஸ்வரன்) கேள்வி கேட்கப்பட்டிருந்தால், பிரபாகரனின் போராட்டம் சிங்கள அரசியல்வாதிகளால் ஏற்பட்டது என்பதை நான் தெளிவாகக் கூறியிருப்பேன்" என தொடர்ந்தார்.

"சில நாட்களுக்கு முன்பு ஒரு சிங்கள நேர்காணலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் திரு சுமந்திரன் தமது கட்சி ஆயுதப் பேராட்டத்தை எப்போதும் குறை கூறியே வந்துள்ளது என்றும் தான் இலங்கை கொடியை ஏற்று சிங்களத்தில தேசிய கீதம் பாட தாயராக உள்ளேன்" என தெரிவித்திருக்கிறார் என தமிழ் தேசிய மக்கள் முன்னணி தனது ட்வீட்டரில் பதிவு செய்திருந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம், "திரு சுமந்திரன் தமிழ் தேசியவாதத்தை மறந்து விட்டார். அதனால் தான் தமிழ் போராட்டத் திற்கான ஆயுத போராட்டத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளவில்லை" என்று அவர் வலியுறுத்தியு ள்ளார். "அவர் இலங்கை சிங்கக் கொடி மற்றும் தேசிய கீதத்தை ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் வட்டுக்கோட்டை தீர்மானத்தை நிராகரிப்பதாகவும் அவர் கூறியுள்ளார். எங்கள் வலி பல ஆண்டுகளாக நீடிக்கிறது. 11 ஆண்டுகளாக அவர்களின் கட்சியின் அரசியல் நடவடிக்கைகள் கட்சியின் அடிப்படை அபிலாசைகளிலிருந்து விலகிச் செல்கின்றன என்று நாங்கள் வலியுறுத்தி வருகிறோம். திரு மஹிந்த ராஜபக்ச மற்றும் அவரது அரசாங்கத்தை உள்நாட்டுப் போரில் அவர்கள் வகித்த பங்கிற்கு திரு சுமந்திரன் பாராட்டியுள்ளார் " என கூறினார்.

முன்னாள் புலிகளை உறுப்பினராக கொண்டுள்ள கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுமந்திரனை கடுமையாக சாடியதுடன் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு தாங்கள் வழங்கிவரும் ஆதரவை விலக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என எச்சரித்தும் உள்ளது.

காணாமல் போனவர்களின் குடும்பங்களின் சங்கம் உட்பட பல சிவில் சமூக அமைப்புகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செய்தித் தொடர்பாளரைக் கண்டித்ததுள்ளன, "திரு சுமந்திரன் கொழும்புக்கு விசுவாசமானவர், கொழும்பை விரும்புகிறார். அவர் தமிழ் மக்களைப் பற்றி சிறிதும் கவலைப்படுவதில்லை. சிங்கள மக்கள் அவரை சேர் பொன்னம்பலம் ராமநாதனுக்கு ஒத்த நபராகவே பார்க்கிறார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அவர் செயல்படுகிறார். இலங்கை அரசாங்கத்தின் அரசியலமைப்பைப் பாதுகாக்க அவர் பணியாற்றுகிறார்" என்று தெரிவித்தன.

வவுனியாவில் காணாமல் போனவர்களின் குடும்பங்கள் தங்களது 715 வது நாளில் தொடர்ச்சியான ஆர்ப்பாட்டத்தில் "சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோரை தமிழ் அரசியலில் இருந்து நீக்கிய பின்னர் தமிழர்களுக்கு முதலில் சுதந்திரம் கிடைக்கும்." என்று எழுதப்பட்ட ஒரு பெரிய பதாகையை ஏந்தி ஒரு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

உலகெங்கிலும் உள்ள புலம்பெயர் தமிழர்களை திரு சுமந்திரன் அவர்களை "புலம்பெயர் புலிகள்" என்று குறிப்பிடுவது மிகவும் புண்படுத்தக் கூடியது மற்றும் மன்னிக்க முடியாதது, இது வெளிநாட்டில் வாழும் தமிழர்கள் குறித்து இலங்கை உளவுத்துறையின் அதே கருத்தை அவர் பகிர்ந்து கொள்கிறார் என்ற உண்மையை தெளிவாக அம்பலப்படுத்துகிறது. இது போலவே பிப்ரவரி 2017 இல் தன்னை கொலை செய்யும் முயற்சிக்கான திட்டமிடல் வெளிநாட்டில் நடந்துள்ளது என்று ஒரு போலியான குற்றச்சாட்டையும் அவர் புலம்பெயர் தமிழ் மக்கள் மீது சுமத்தியிருந்தார். புலம்பெயர் செயற்பாட்டாளர்களை இவ்வாறு புலி முத்திரை குத்துவதானது, அவர்கள் இலங்கை திரும்பும்போது கைது செய்யப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாவதற்கு வழிகோலி உள்ளது. STF பாதுகாப்பை பெறுவதற்காக திரு சுமந்திரனால் அரங்கேற்றப்பட்ட ஒரு திட்டமிட்ட சதி நாடகம் தான் இந்த கொலைமுயற்சி என்றபதற்கான நம்பக மான தகவல்கள் இப்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளன. இந்த சதியில் பலிக்கடாவாக்கப்பட்ட, அப்பாவியான 5 முன்னாள் புலி உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டு, இன்னும் சிறையில் சித்திரவதை அனுபவித்து வருவதற்கான முழுப் பொறுப்பம் திரு சுமந்திரன் ஏற்க வேண்டும். இந்த 5 முன்னாள் புலி உறுப்பினர்களை மட்டுமல்லாமல் இலங்கைக்கு திரும்பியதும் கடத்தப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்ட தமிழ் ஆர்வலர்களையும் சித்திரவதை செய்யப்படுவதற்கும் இவரே உடந்தையாகிறார்.

சுருக்கமாக சொல்வதானால், திரு சுமந்திரன் எப்போதுமே தனக்கும் அவரது தமிழ்த் தேசியக்கட்சிக்கும் வாக்களித்த தமிழ் மக்களின் விருப்பங்களுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் முரணாக செயல்பட்டு வருகிறார் என்பது வெளிப்படையானது. தனது சமீபத்திய நேர்காணலின் மூலம், ஏற்கனவே இழப்பின் வேதனையால் பாதிக்கப்பட்டு, நீதி இல்லாமல் விடப்பட்டிருக்கும் தமிழ் மக்களின் இதயங்களில் ஆறாத காயத்தையும் வலியையும் அவர் உருவாக்கியுள்ளார்.

தனது சொந்த கருத்தை வெளி ப்படுத்தும் சுதந்திரம் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், அவரும் அவரது கட்சியும் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்களின் கருத்துக்களை மதிக்கத் தவறிவிட்டார். தனது சொந்த கருத்துக்களை ஒதுக்கி வைக்க இயலாமையை நிரூபிப்பதன் மூலம், அவர் தனது சொந்த மக்களை ஜனநாயக முறையில் பிரதிநிதித்துவப்படுத்தும் திறன் இல் லை என்பதை நிரூபித்துள்ளார்.

தனது சொந்த நிகழ்ச்சி நிரல்களையும் கருத்துக்களையும் விற்கும் ஒரு தளமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பயன்படுத்த அவர் அனுமதிக்கப்படக்கூடாது. சுயேட்சையாக நிற்கவோ அல்லது தனது சொந்தக் கருத்துக்கள் அடிப்படையில் தனது சொந்தக் கட்சியை உருவாக்கவோ அவருக்கு முழு சுதந்திரமும் உண்டு. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வாக்களித்த தமிழர்களின் ஆணையை அவர் மதிக்க முடியாததால், அவர் உடனடியாக தனது பதவியை துறந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு வெளியேற வேண்டும்.

தொடர்ச்சி 07பக்கம்



# ஏமாற்று அரசியல்

இழுபறிகளுக்கு மத்தியில் ஆகஸ்ட் 5 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் முக்கியமானது. இந்தத் தேர்தல் பல விடயங்களில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றிருக்கின்றது.

கிட்டத்தட்ட 75 இலட்சம் பேர் கொரோனா வைரஸ் என்ற நச்சு நுண்கிருமியின் தாக்கத்திற்கு உள்ளாகி நான்கு இலட்சத்திற்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ள மாபெரும் உலகளாவிய நோயிடருக்கு மத்தியில் இந்தத் தேர்தல் நடைபெறவுள்ளது. இலங்கையும் ஆட்கொல்லி கொரோனா வைரஸின் அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருக்கின்றது. நாட்டில் 11 பேர் இந்த வைரஸுக்குப் பலியாகியிருக்கின்றனர். சராசரியாக 2 தொடக்கம் 4, 5 பேர் வரையில் நாளாந்தம் நோய்த் தொற்றுக்கு ஆளாகி வரும் நிலையில் கிட்டத்தட்ட 1900 பேரை இந்த வைரஸ் பற்றிப் பிடித்திருக்கின்றது.

கொரோனா வைரஸின் பிடியில் இருந்து நாடு முழுமையாக விடுபடாத நிலைமையில் எந்த வேளையிலும் இரண்டாம் சுற்று நோய்த் தாக்கம் ஏற்படலாம் என்ற அச்சத்துக்கு மத்தியில் நாட்டு மக்கள் வாக்குச் சாவடிகளுக்குச் செல்ல இருக்கின்றார்கள்.

பொதுத் தேர்தலுக்காக நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட தருணத்தில் புகுந்த கொரோனா வைரஸ் நாட்டை முழுமையாகப் புரட்டிப் போட்டது. சகல நடவடிக்கைகளையும் ஸ்தம்பிதம் அடையச் செய்து இயல்பு நிலைமைகளுக்கு இடையூறு விளைவித்தது. தேர்தலை நடத்த முடியவில்லை. கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்கு ஜனாதிபதி இணங்கவில்லை. இறந்து விட்ட நாடாளுமன்றத்திற்கு எவ்வாறு உயிர் கொடுப்பது? என்று அரச தரப்பினர் தத்துவக் கேள்வி எழுப்பினர். அரசியலமைப்பு ரீதியான பிரச்சி னைகள் இதனால் தலையெடுத்தன.

நீதித்துறை, நிறைவேற்றதிகாரம், சட்டவாக்கத்துறை என்ற மூன்று முக்கிய தூண்களையும் கொண்டிருக்க வேண்டிய ஜனநாயக ஆட்சியில் நாடாளுமன்றம் முடங்கிய நிலையில் நி'வேற்றதிகாரம் மட்டுமே கொரோனா வைரஸ் நோய்க்கு எதிரான போராட்டத்தால் ஆட்சி நிர்வாகச் செயற்பாடுகளில் மேலோங்கி இருந்தது.

நாடாளுமன்றக் கலைப்பும் கொரோனா வைரஸின் அச்சுறுத்தலுக்கு மத்தியில் தேர்தலை நடத்த மேற்கொள்ளப்பட்ட அரச தரப்பின் முயற்சியும் அடிப்படை உரிமை மீறலாக உச்ச நீதி மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. அந்த விடயங்கள் நீதிமன்றத்தினால் நிகராகரிக்கப்பட்டு விசாரணைகள் மறுக்கப்பட்டன.

இதற்கிடையில் அரச நிர்வாகக் கட்டமைப்பின் முக்கிய துறைகளில் இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டதுடன், இராணுவ மேலாதிக்கம் கொண்டதாக ஜனாதிபதியின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயற்படத்தக்க வகையில் கிழக்கு மாகாணத்தின் தொல்லியல் இடங்களைப் பராமரிப்பதற்கான செயலணியும், தேசிய பாது காப்பை உறுதிப்படுத்தி ஒழுக்கமுள்ள குடி மக்களை உருவாக்குவற்கான செயலணியும் ஜனாதிபதியினால் உருவாக்கப்பட்டன.

நிறைவேற்றதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்ட இலங்கையின்

**பி.மாணிக்கவாசகம்**




ஜனநாயக ஆட்சி நிர்வாகம் இதனால் சர்வாதிகாரத்தைக் கொண்ட இராணுவ ஆட்சியாக மாறுகின்றது. மாற்றப்படுகின்றது என்ற குற்றச்சாட்டுக்களும் கண்டனக் குரல்களும் எழுந்துள்ளன.

## கேள்விகள்

இத்தகைய அரசியல் ரீதியான குழப்ப நிலைமைகளின் பின்புலத்தில்தான் ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி வரலாற்று ரீதியான முக்கித்துவம் மிக்க பொதுத் தேர்தலை சந்திப்பதற்குத் நாடு தயாராகின்றது. நாட்டு மக்கள் தயார்ப்படுத்தப்படுகின்றார்கள்.

இந்த நிலையில் முப்பது வருடகால யுத்தத்திற்கு முகம் கொடுத்து, யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட 11 ஆண்டுகளின் பின்னரும், அதன் தாக்கத்தில் இருந்து இன்னும் விடுபடாத நிலையில் தமிழ்த்தரப்பினர் இந்தத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றார்கள். எப்படி இந்தத் தேர்தலைக் கையாளப் போகின்றார்கள் என்பது முக்கிய பிரச்சினையாகவும் முக்கிய கேள்வியாகவும் எழுந்திருக்கின்றது.

அரசியலுக்கு மக்களை அரசியல்வாதிகள் அணி திரட்ட வேண்டும். தீர்க்கமானதொரு கொள்கையின் கீழ் ஓர் அரசியல் கட்சி என்ற கட்டமைப்பிற்குள் அவர்களை ஒன்றிணையச் செய்ய வேண்டும். மக்களை அணி திரட்டுவது என்பது சாதாரண காரியமல்ல. ஓர் அரசியல் கட்சி முன்னெடுக்கின்ற ஒரு கொள்கையும் அதனை நிறைவேற்றுவதற்கான வழித்தடங்கள், வழிமுறைகள் பற்றிய தெளிவான நோக்கையும், போக்கையும் கொண்டிருக்க வேண்டியது அவசியம். இது மக்களுடைய மனங்களை வெல்லக் கூடியதாக இருத்தல் வேண்டும். அந்தக் கட்சியின் மீதும், அதன் தலைவர்கள் மீதும் நம்பிக்கை வைத்து அவர்களின் பின்னால் செல்வதற்கு மக்களை அவர்கள் தயார்ப்படுத்தல் வேண்டும்.

புதிய அரசியல் கட்சிகளானால் புதிய கொள்கைகளையும் புதிய புதிய வழிமுறைகளையும் காட்டி மக்களை வழிப்படுத்தவும், அவர்களை அணி திரட்டவும் முடியும். புதிதென்றால் பொதுவாகவே கவர்ச்சியும் இருக்குமல்லவா?

ஆனால் பழைய அரசியல் கட்சிகளும் பழைய அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகள் என்போர் தமது கட்சியின் பழைய கொள்கைகளுக்குப் புதிய வடிவம் கொடுக்க வேண்டும். புதிய வழித்தடங்களையும், புதிய செயல்முறைகளையும் மக்களிடம் முன்வைக்க வேண்டும். அப்போதுதான் பழைய அரசியல் கட்சிகளும், அதன் தலைவர்கள் மற்றும் அரசியல்வாதிகளும் மக்கள் மனங்களை வெல்லக் கூடியதாக இருக்கும்.

மக்களை அணி திரட்டல் என்பது அவர்களை அரசியல் ரீதியாக வழிப்படுத்துதல் அல்லது வசியப்படுத்தல் என்றுகூடச் சொல்லலாம். இதனால் தான் ஜனரஞ்சக அரசியல் என்றும், ஜனரஞ்சகத் தலைமை அல்லது தலைவர்கள் என்ற சொற்பதங்கள் அண்மைக்காலமாக தமிழ் அரசியல்வெளியில் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றன.

ஏற்கனவே மக்களுடைய அரசியல் தவைர்களாக அல்லது மக்கள் அணிதிரண்டிருந்த அரசியல் கட்சிகளையும், அந்தக் கட்சிகளின் தலைவர்கள், அரசியல்வாதிகளையும் எவ்வாறு இந்தத் தேர்தல் காலத்தில் ஜனரஞ்சக மிக்கவர்களாக மாற்றுவது? அத்தகைய கட்சிகளின் கொள்கைகளை எவ்வாறு ஜனரஞ்சகமாக்குவது?

இந்தக் கேள்விகளுக்கு விடை காணப்பட வேண்டியதுஅவசியம். விடைகாணவேண்டியதும், அதனடிப்படையில் மக்கள் மத்தியில் ஜனரஞ்சக மிக்கவர்களாக தங்களை முன் நிலைப்படுத்துவது தமிழ் அரசியல் கட்சிகளினதும், அரசியல் தலைவர்கள், அரசியல்வாதிகளினதும் தலையாய கடமையாகும்.

## எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுகின்ற நிலைமை

இதனை தேர்தல்கால அரசியல் உத்தியாகவும், வெற்றிகரமான அரசியலுக்குரிய அடிப்படைச் செயற்பாடாகவும் கொள்ளலாம். மக்களை அணி திரட்டுவதன் அவசியம் குறித்து அரசியல்வாதிகளுக்கு எடுத்துரைப்பது கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதையாகத்தான் முடியும். ஏனெனில் அவர்கள்தான் அரசியலில் ஊறித் திளைத்தவர்களாயிற்றே? அவர்களுக்கு இது பற்றி எடுத்துரைப்பது என்பது அதிகப் பிரசங்கித் தனமுமாகும் அல்லவா?

ஆனாலும் யுத்தம் முடிவுக்கு வந்து பதினொரு ஆண்டுகள் கடந்து விட்டன. யுத்தத்தில் வெற்றி பெற்று அந்த யுத்த வெற்றியையே அரசிலுக்கான முதலீடாகக் கொண்டு அரைதசாப்தத்துக்கும் மேலாக மேலாதிக்க ஆட்சி நடத்தி, தேர்தல் தோல்வியடைந்து பின்வாங்கியவர்களே மீண்டும் உத்வேகத்துடன் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி இருக்கின்றார்கள். அந்த ஆட்சி முறைமையை முழு அளவிலான அரசியல் பலமாக மாற்றி அமைப்பதற்கான அரசியல் வியூகம் வகுத்துச் செயற்படத் தொடங்கி இருக்கின்றார்கள். அவர்களின் முக்கியச் செயற்பாடாக, அவர்களுடைய அரசியல் நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சமாக இந்தப் பொதுத் தேர்தலை அவர்கள் முறையான வியூகம் வகுத்து எதிர்கொள்ளத் தயாராகி இருக்கின்றார்கள்.

அவர்களுடைய இந்தத் தேர்தல் வியூகமும், தேர்தல்கால வியூகமும் தமிழ் மக்களை அரசியல்

தொடர்ச்சி 07பக்கம்

## ஏமாற்று அரசியல் ... தொடர்ச்சி...

ரீதியாகப் பலவீனப்படுத்துவதை முக்கிய அம்சமாகக் கொண்டிருக்கின்றன. அதேவேளை, தமிழ் மக்களின் அரசியல் தலைமைகள் மக்களைக் கவரத்தக்க அல்லது ஜனரஞ்சகம் மிக்க நிலைமையில் இருக்கின்றார்களா என்பது கேள்விக் குறியாக உள்ளது.

முக்கியமாக நல்லாட்சி அரசாங்கம் என அழைக்கப்பட்ட முன்னைய ஆட்சியில் அசாங்கத்துடன் நல்ல உறவைக் கொண்டிருந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் முன்னேற்றம் கொண்டிருக்கவில்லை.

சிக்கல்கள் மிகுந்ததாகத் தோற்றம் கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு, சிக்கல்கள் மிகுந்ததாக மாற்றியமைக்கப்பட்டுள்ள எரியும் பிரச்சினைகளில் தீர்வு காணப்பட்டிருக்க முடியும் என்று நம்பப்படுகின்ற பிரச்சினைகளுக்குக் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் தீர்வு காண முடியவில்லை என்ற குறைபாடும், குற்றச்சாட்டும் இருக்கின்றன.

நல்லாட்சி அரசாங்கம் சர்வதேச அரங்குகளில் சிக்கல்களை எதிர்கொண்ட போதெல்லாம், அரசாங்கத்தைப் பாதுகாப்பதற்காகவே தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் முற்பட்டிருந்தனர். செயற்பட்டிருந்தனர். நிபந்தனையற்ற ஆதரவை வழங்கிய போதிலும், கிடைத்தற்கரிய சந்தர்ப்பமாகக் கிடைத்த தருணங்களில் அரசுக்கு அழுத்தம் கொடுத்து பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறிவிட்டனர் என்ற அதிருப்தியும் அரசியல் ரீதியான குறைபாட்டையும் மக்கள் தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் மீது கொண்டிருக்கின்றார்கள்.

இதனால் இந்தத் தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் அரசியல், ஏமாற்ற அரசியலாகியிருக்கின்றது. ஏமாற்றங்களே அரசியலாகி இருக்கின்றது. இந்த நிலைமைகளுக்கு எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவதைப் போன்று தமிழ் மக்களின் அரசியல் நிலைப்பாட்டிற்கும், அவர்களின் அரசியல் எதிர் பார்ப்புகளுக்கும் பாதகமான அரசியல் செயற்பாடுகளையே அரச தரப்பினர் முன்னெடுத்திருக்கின் றனர்.

### பொதுஜன பெரமுனவின் இலக்கு

யுத்தத்திற்குப் பின்னரான தமிழ் அரசியலில் ஏமாற்றங்களையே எதிர் கொண்டுள்ள மக்களுக்கு நம்பிக்கையூட்டி மாற்று அரசியல் தலைமையை வழங்கியிருக்க வேண்டிய கூட்டமைப்பில் இருந்து பிரிந்து சென்ற சக்திகளும் தமது முயற்சிகளில் வெற்றி பெறவில்லை. ஒரு மாற்றுத் தலைமையை உருவாக்குவதற்காக ஒன்றிணைந்து மேற்கொள்ளப்பட்ட அந்த சக்திகளின் முயற்சிகளும் மக்கள் மத்தியில் போதிய அளவில் நம்பிக்கையை ஏற்படுத்தவில்லை.

தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள ஏமாற்றங்கள் மிகுந்துள்ள அரசியலில் அவர்களின் நம்பிக்கையை வென்றெடுத்து வழிநடத்தக் கூடிய அரசியல் தலைமையை இந்த மாற்று சக்திகளினால் உருவாக்க முடியவில்லை.

இத்தகைய ஒரு பின்புலத்தில்தான் தமிழ்த் தரப்பு இந்தத் தேர்தலை எதிர் கொண்டிருக்கின்றது. இந்தத் தேர்தல் சாதாரண தேர்தல் அல்ல. வெறுமனே ஐக்கிய தேசிய கட்சியும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து உருவாக்கிய நல்லாட்சி அரசாங்கத்தைத் தோற்கடிக்கின்ற தேர்தல் அல்ல. மாற்று அரசாங்கத்தை உருவாக்குவதே இந்தத் தேர்தலின் அடிப்படை இலக்காக அமைந்திருக்கலாம்.

ஆனால் உண்மையில் அந்த இலக்கையும் கடந்து வரப்போகின்ற ஒரு தசாப்த கால நாட்டின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கின்ற ஒரு தேர்தலாகவும் அமைந்திருக்கின்றது. சாதாரண நோக்கில் இந்தத் தேர்தல் பொதுஜன பெரமுனவுக்கும், ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையிலான ஓர் அதிகாரப் போட்டியாகவோ அல்லது பொதுஜன பெரமுனவுக்கும் ஐக்கிய மக்கள் சக்தி என்ற சஜித் பிரேமதாசாவின் தலைமையிலான கூட்டணிக்கும் இடையிலான ஆட்சி அதிகாரப் போட்டிக்கான ஒரு தேர்தல் அல்ல.

உண்மையில் இது சிங்கள பௌத்த தேசியத்திற்கும் தமிழ்த் தேசியத்திற்கும் இடையிலான ஒரு பலப்பரீட்சையைத் தளமாகக் கொண்ட தேர்தல் என்றே கூற வேண்டும். ஏனெனில் பிரதமர் மகிந்த ராஜபக்சவின் தலைமையிலான பொதுஜன பெரமுன இந்தத் தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டதாக வெற்றி அடைய வேண்டும் என்ற இலக்கைக் கொண்டிருக்கின்றது.

தென்னிலங்கைக் கட்சிகளைத் தோற்கடிப்பது மட்டுமல்லாமல் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையில் ஐக்கிய தேசிய கட்சிக்கு பெற்றிருந்த மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும்விட அதிக பெரும்பான்மை பலத்தை பெற்றது போன்ற ஒரு தேர்தல் வெற்றியையே பொதுஜன பெரமுன இலக்காகக் கொண்டிருக்கின்றது.

### புத்தெழுச்சியும் புதுவேகமும்

இந்த வெற்றி இலக்கை எட்டுவதற்கு பொதுஜன பெரமுனவின் ஊடாக பிரதமர் மகிந்த ராஜபக்சவும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் இனவாத வழிமுறையிலான அரசியல் உத்தியையே தேர்ந்தெடுத்துள்ளனர். இந்த இனவாத அரசியல் உத்தியே நல்லாட்சி அரசாங்கக் காலத்து உள்ளூராட்சித் தேர்தலிலும் அதனையடுத்த ஜனாதிபதி தேர்தலிலும் பொதுஜன பெரமுனவுக்கு அமோக வெற்றியை ஈட்டித் தந்தது என்பதை மறந்துவிட முடியாது. அந்த அரசியல் நிலைமையை சாதாரண விடயமாக நோக்கிப் புறந்தள்ளி விடவும் முடியாது.

சிங்கள பௌத்த தேசியமே யுத்த மோதல்களின் போதும், அதற்குப் பின்னரான காலத்திலும் இலங்கை அரசியலில் ஆளுமையுடன் அரசோச்சியது. ஆனால் சிங்கள மக்கள் மத்தியில் பிரதமர் மகிந்த ராஜபக்சவின் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள பொதுஜன பெரமுன என்ற இனவாதப் போக்கிலான அரசியல் சக்தியானது சிங்கள பௌத்த தேசியத்திற்குப் புத்தெழுச்சியையும் புது வேகத்தையும் அளித்திருக்கின்றது.

இதற்கு முன் தென்பகுதி அரசியலில் சிங்கள மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றிருந்த அரசியல் போக்கில் இருந்து சற்று வேறுபட்டது. தனித்துவமானது. தீர்க்கமான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றது.

பொதுஜன பெரமுனவுக்கு முந்திய சிங்கள பௌத்த தேசியம் என்பது பன்மைத் தன்மையை சிறிய அளவில் கடைப் பிடித்திருந்தது. ஆனால் பொதுஜன பெரமுனவின் தலைமையிலான சிங்கள பௌத்த தேசியம் என்பது முற்று முழுதாக சிங்கள மக்களுக்கானது. சிங்கள மக்களால் ஆனது. அதுவும் முற்று முழுதாக பௌத்தத்தையும் பௌத்த மக்களையும் முதன்மைப்படுத்தியது. முழுமையாகக் கொண்டு இயங்குவது. இதன் அடிப்படையில்தான் கோத்தாபய ராஜபக்ச பெரும்பான்மையான பௌத்த சிங்கள மக்களின் வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாகத் தெரிவாகினார்.

அதே சிங்கள பௌத்த தேசிய உணர்வின் அடிப்படையில் இந்த நாட்டின் கிட்டத்தட்ட 75 வீத பெரும்பான்மையைக் கொண்ட சிங்கள மக்களின் திரட்சியான வாக்களிப்பையே பொதுஜன பெரமுன தனது தேர்தல் வெற்றிக்கு இலக்காகக் கொண்டிருக்கின்றது. அதற்கு அவசியமான பிரசார நடவடிக்கைகள் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்த தருணத்தில் இருந்தே சிங்கள மக்கள் மத்தியில் ராஜபக்சாக்கள் திட்டமிட்ட வகையில் முன்னெடுத்து வந்துள்ளனர்.

ஜனாதிபதியாகப் பதவியேற்ற பின்னர் தனக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே முன்னைய அரசாங்கத்தின் நாலரை ஆண்டுகால ஆட்சி முற்றுப் பெற்ற மறுநாளே நாடாளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலுக்கான அறிவித்தலை ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச வெளியிட்டிருந்தார்.

### ஒன்றிணைவது அவசியம்

பௌத்த மகாநாயக்கர்களுடன் இறுக்கமான அரசியல் உறவை ஏற்படுத்தி அவர்களுடைய வழிகாட்டலை அடிப்படையாகக்கொண்டு ஆட்சி நடத்துகின்ற போக்கில் சிங்கள மக்களின் பௌத்த மத உணர்வையும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தனது அரசியல் இலக்குக்கு அணி சேர்த்துக் கொண்டார்.

இத்தகைய ஒரு பின்புலத்தில்தான் தமிழ்த் தரப்பினர் இந்தத் தேர்தலைக் கையாள வேண்டி இருக்கின்றது. இந்தத் தேர்தலுக்கு முகம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றது. சிங்கள பௌத்த தேசியம் என்ற இறுக்கமான அரசியல் திரட்சியுடன் செயற்பட்டு வருகின்ற ஆட்சி அதிகாரம் கொண்ட பொதுஜன பெரமுன விரித்துள்ள தேர்தல் அரசியல் வியூகத்தில் பல்வேறு பிரிவுகளாகவும், பல்வேறு கட்சிகளாகவும் பிரிந்து செயற்படுகின்ற தமிழர் தரப்பு தனது அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகியிருக்கின்றது.

எனவே, தமிழ்த் தரப்பு என்ற திரட்சியானதோர் அரசியல் சக்தியாகப் பரிணமிப்பதற்குப் பதிலாக உதிரிகளாக, நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதற்கான தங்களுக்கிடையிலான தேர்தல் போட்டியில் இறங்கியிருப்பதையே காண முடிகின்றது. தேர்தலுக்குப் பின்னரான காலத்தில் சக்தி மிக்க சிங்கள பௌத்த தேசியப் போக்கைக் கொண்ட ஆட்சி அதிகார சக்தியை உதிரிகளாகவே எதிர் கொள்கின்ற நிலைமைக்கே தமிழ்த்தரப்பை இட்டுச் செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ள நிலையிலும் தமிழ்த்தரப்பு அரசியல் ரீதியாக தங்களுக்கிடையிலான பேதங்களையும் அரசியல் தன் முனைப்புக்களையும் கைவிட்டு ஒன்றிணைவதற்குக் காலம் கடந்துவிடவில்லை என்றே கூறவேண்டும். தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு விட்டன. அவற்றில் மாற்றங்களைச் செய்ய முடியாது. ஆனால் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்ற ஆசனங்களைக் கைப்பற்றுவதற்காக கட்சிகளாகவும், கூட்டணிகளாகவும் சுயேச்சைகளாகவும் களமிறங்கியுள்ள அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து ஒரு குடையின் கீழ் இயங்குவதற்கான வழித்தடத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அத்தகைய ஒற்றுமையின் ஊடாகத்தான் இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைத் தமிழ்த் தரப்புக்கு உரியவைகளாக திரட்ட முடியும். தமிழ்த் தரப்பும் பல்வேறு கட்சிகளாக இருந்தாலும் தமிழ் மக்களின் திரள் நிலை அரசியல் சக்தியாக உருவாக முடியும்.

• • •

## சுமந்திரன் ஏன் ... தொடர்ச்சி...

அவரிடம் சுயகௌரவம் கொஞ்சமானது எஞ்சியிருநடதால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அவரை நீக்குவதற்கு முன்பு அவர் உடனடியாக பதவி விலக வேண்டும். தவறினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் ஆணைப்படி செயல்பட வேண்டும், அவரை கட்சியைவிட்டு நீக்க வேண்டும் அல்லது தமிழர்களிடமிருந்து அனைத்து ஆதரவையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இழக்க நேரிடும்.

முற்றும்

# தொல்லியல் மரபுரிமை அடையாளங்களை பாதுகாப்பதை அனைவரும் மேற்கொள்ள முடியும்



பகுதி 01

**பேராசிரியர் பரமு புஸ்பரத்தினம்**

**சிறீலங்கா அரசு சிங்களவர்கள் மற்றும் போர்க் குற்றவாளிகளைக் கொண்ட அரச தலைவர் செயலணி ஒன்றை தொல்பொருள் ஆய்வுக்கென அண்மையில் கிழக்கு மாகாணத்தில் நியமித்துள்ளது. இது தமிழ் இனத்தின் வரலாற்றை அழிக்கும் திட்டமிட்ட நடவடிக்கை என்பது தெளிவனது. இந்த நிலையில் இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்லியல் வரலாற்றுத்துறை தலைவரும், மூத்த பேராசிரியருமான பரமு புஸ்பரத்தினத்துடன் நாம் மேற்கொண்ட நேர்காணலை இங்கு தருகின்றோம். பேராசிரியர் புஸ்பரத்தினம் அவர்கள் யாழ். கலாச்சார நிலைய பணிப்பாளராக பணியாற்றி வருவதுடன், தொண்டி மீள் புனரமைப்பு பிரிவின் முக்கிய ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார்.**

**அவர் இலக்கு ஊடகத்திற்கு வழங்கிய பிரத்தியேக நேர்காணலின் முதலாவது பகுதி இதோ:**

**கேள்வி:**

***எமது வரலாற்று தொல்பொருட்களை பாது காப்பதில் இலங்கையில் தமிழ் மக்களுக்கு என்று ஒரு சட்ட ஷரத்துக்கள் ஏதாவது இருக்கின்றதா?***

**பதில்:**

இலங்கை தொல்லியல் சட்டத்தில் நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட மண்ணிற்குள் புதையுண்ட, மண்ணிற்கு வெளியே தெரிகின்ற வரலாற்று பெறுமதியுடைய சான்றுகள் அனைத்தும் குறிப்பிட்ட பிரதேசத்தின் மரபுரிமைச் சின்னங்களாக பிரகடனப்படுத்துவதற்கு தொல்லியல் சட்டத்தில் இடமுண்டு. அந்த மரபுரிமைச் சின்னங்கள் ஒரு தொல்லியல் திணைக்களத்தால் அடையாளப்படுத்தப்பட்டு,ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படுவதற்கு சட்டத்தில் இடமுண்டு. அதை தொல்லியல் திணைக்களம் மட்டும் தான் செய்ய வேண்டும் என்பதில்லை. பொது அமைப்புக்கள் தொல்லியல் திணைக்களத்தின் அனுமதியோடு அந்த மரபுரிமைச் சின்னங்களை கண்டறிந்து, பாது காப்பதற்கும், அதை ஒரு மரபுரிமைச் சின்னமாக தொல்லியல் திணைக்களம் ஊடாக பிரகடனப்படுத்துவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. உதாரணமாக வடமாகாண முதலமைச்சராக கௌரவ நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் பணியாற்றிய காலகட்டத்தில் அவரின் முயற்சியால், கலாச்சார திணைக்கள பணிப்பாளர் நாயகமும், தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தையும் அழைத்து ஒரு கலந்துரையாடல் மேற்கொண்ட சமயம், இந்தக் கேள்வியை நான் அவர்களிடம் கேட்ட போது, அவர்கள் தங்கள் அனுமதியோடு இந்த மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பதற்கு பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை போன்றவை சில வருமானங்களை ஈட்டுவதற்கும் இடமுண்டு என்பதை அவர்கள் உறுதி செய்துள்ளார்கள். ஆகவே எங்கள் மரபுரிமைச் சின்னங்களை நாங்களே பாதுகாப்பதற்கு சட்டத்தில் இடமுண்டு. உதாரணமாக கிழக்கு மாகாண முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் அவரின் முயற்சியால் கிழக்கிலங்கையில் பல மில்லியன் ரூபாய்கள் செலவில் இஸ்லாமிய கலாசார அருங்காட்சியகம் ஒன்று உருவாக்கப்பட்டதை இந்த இடத்தில் நான் நினைவு படுத்த விரும்புகின்றேன்.



**கேள்வி:**

***எந்த வகையில் தமிழர்களின் வரலாற்று சான்றிதழ்களை உலகில் ஏதேனும் ஒரு அமைப்புக்கள் மூலம் பாதுகாக்க முடியும்? அல்லது பாதுகாக்க வேண்டும்?***

**பதில்:**

அது செய்வதற்கு இடமுண்டு. பருத்தித்துறையில் தெருமூடி மடம் என்பது சுவிஸில் உள்ள பருத்தித்துறை பொது மக்களின் ஒன்றியத்தின் முயற்சியால் பாதுகாக்கப்பட்டுள்ளது. புங்குடுதீவில் வரலாற்றுப் பழைமை வாய்ந்த திருக்குமரமும் அதனோடு இணைந்த வரலாற்றுச் சின்னங்களும் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த மரபுரிமைச் சின்னங்களை பாதுகாக்கின்ற வேளையில், அதற்கான உதவிகளை வெளிநாட்டு நிறுவனங்கள் வழங்குகின்ற போது, தனிப்பட்டவர்கள் அந்த நிதியை பெற்றுச் செய்வதில் சில சட்டச் சிக்கல்கள் உண்டு. தப்பான விமர்சனங்கள் உருவாகுவதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆகவே அந்த நிதியை ஒரு அரசாங்க அதிபர் ஊடாக அல்லது பிரதேச செயலாளர் ஊடாக அல்லது பல்கலைக்கழகத்தின் ஊடாக நாங்கள் நிதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறானதொரு மரபுரிமைச் சின்னத்தை வெளிநாட்டு உதவியோடு மீள்புனரமைப்புச் செய்கின்ற போது, அதற்கான ஒரு முன்மொழிபை தொல்லியல் திணைக்களத்திற்கு அனுப்பி அவர்களின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தால் சட்டச் சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பில்லை. அது மட்டுமல்லாமல் அவ்வாறு செய்வதை தொல்லியல் திணைக்களம் அங்கீகரிக்கவும் தயாராக இருக்கின்றது. அவர்களுடைய மேற்பார்வைகளும் சில ஆலோசனைகளை பெற்றுக் கொள்வதற்கும் வாய்ப்புக்கள் உண்டு. ஆகவே எங்கள் மரபுரிமைச் சின்னங்களை ஒரு வெளிநாட்டு உதவியோடு நாங்கள் பாதுகாப்பதற்கு சட்டத்தில் இடமுண்டு.



இந்த இடத்தில் இன்னுமொன்றை குறிப்பிட விரும்புகின்றேன். இலங்கையில் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட இடங்களில் மரபுரிமை சின்னங்கள் உண்டு. அவை அனைத்தும் பாதுகாக்கப்ப zட்டதாக கூறமுடியாது. எங்களின் பிரதேசத்திலுள்ள மரபுரிமைச் சின்னங்களை அரசு அல்லது தொல்லியல் திணைக்களம் என்பன பாதுகாக்க முறற்படவில்லை என்ற ஒரு விமர்சனம் இருப்பதையும் நான் நன்கு அறிவேன். ஆனால் நாங்களாகவே முயற்சி எடுத்து எங்களின் மரபுரிமைச் சின்னங்களை பாதுகாப்பதற்கு அதிக வாய்ப்புக்கள் உண்டு என்பதை குறிப்பிட விரும்புகிறேன்.

**கேள்வி:**

***அகழ்வாராய்ச்சிகள் இடம்பெறாத காலத்திலேயே 2300 ஆண்டுகள் தொன்மையான தொல் பொருட்கள் எமது ஈழ தேசத்தில் கண்டறியப்பட்டிருக்கின்றது. இந்நிலையில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் இடம்பெறுகின்ற போது அதற்கு முந்தைய பல தொல்பொருட்கள் கிடைப்பதற்குரிய வாய்ப்புக்கள் இருக்கிறது. இந்நிலையில் இலங்கையில் அகழ்வாராய்ச்சிகள் இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடுகள் இருக்கின்றனவா?***

**பதில்:**

நிறைய இருக்கின்றது. இலங்கையில் 1970இற்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில் தமிழ் மொழியின் தொன்மை, தமிழர் பண்பாடு தொடர்பான பல ஆதாரங்கள் தென்னிலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வட இலங்கையிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த செய்திகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்று விழிப்புணர்வு ஏற்படுத்துவதில் ஒரு தொய்வான நிலை காணப்படுகிறது. ஆனால் நாங்கள் தொல்பொருள் சின்னங்கள் எதிர்பாராமல் கிடைத்தது என்று சொல்வதைவிட அகழ்வாராய்ச்சி மூலம் கிடைத்த சான்றுகளை வரலாற்று வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில் சில பின்னடைவுகள் உண்டு. அதை தவிர்த்து மக்களிடையே விழிப்புணர்வை கொண்டு வரு வதற்கு ஊடகங்கள் மிக முக் கிய பங்காற்ற வேண்டும். உதாரணமாக 2017, 2018ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணக் கோட்டையிலே மிகப் பெரிய அகழ்வாராய்ச்சிகள் மேற்கொள்ளப்ப ட்டது. இந்த அகழ்வாராய்ச்சிக்கு உலகில் புகழ்பெற்ற தொல்லியல் அறிஞர் Christopher Davis அவர்களும், அவரின் குழுவினரும் அகழ்வாராய்ச்சிகளை மேற்கொண்ட போது, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திலிருந்து நானும் எனது மாணவர்களும் பங்கு கொண்டோம். அகழ்வின் முடிவிலே கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் குறிப்பிட்ட யாழ்ப்பாணக் கோட்டை 16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயரால் கட்டப்படுவதற்கு முன்பு 2700 ஆண்டுகளுக்கு முன்பே கோட்டைப் பிரதேசத்தில் மக்கள் வாழ்ந்ததற்கும் அந்த மக்கள் தமிழ்நாடு, தென்னிந்தியா, வட இந்தியா, அரேபியா, சீனா, ஆபிரிக்கா போன்ற நாடுகளில் வணிகத்தில் ஈடுபட்டதற்கும் கோட்டை இருந்த பிரதேசம் அன்று தொட்டு மேற்கு ஆசியா, கிழக்கு ஆசியா, தென்கிழக்காசியா, ஆபிரிக்க நாடுகளுக்கு இடையிலான வணிக பரிமாற்று மையமாக இருந்தது என்பதையும் அவரும் நானும் அதைக் குறிப்பிட்டிருந்தோம்.

முக்கியமான ஒரு குறிப்பு. கந்தரோடை, சாட்டி, பூநகரி, அநுராதபுரம், தமிழ்நாடு, இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் ஒரு நாகரீகம் பண்பாட்டோடு தோன்றியதோ அந்த மக்கள் யாழ்ப்பாண கோட்டை பிரதேசத்திலும் வாழ்ந்துள்ளார்கள். யாழ்ப்பாணநகரம் என்பது இற்றைக்கு2300 ஆண்டுகளுக்கு முன்னரே ஆக்கம் பெற்றிருந்ததும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக் கருத்து எல்லா மக்களிடமும் கொண்டு செல்லப்பட்டதா என்பது

**தொடர்ச்சி 12பக்கம்**



# காலனித்துவ காலச் சின்னங்கள் மட்டுமல்ல காலனித்துவ கால முடிவுகளுக்கும் மறுஆய்வு வேண்டும்

அமெரிக்காவில் நடைபெற்ற ஜோர்ஜ் புளொய்ட்டின் மேலான நிறவெறிப் படுகொலைக்கு எதிராக உலகெங்கும் உள்ள மக்கள் திரண்டு எழுந்து காலனித்துவத்தால் உருவாக்கப் பட்ட அடிமைத்துவ போற்றுதலை எல்லா நிலைகளிலும் அகற்ற வேண்டுமென்ற வேண்டுகோளையும் அதனை வலியுறுத்தும் போராட்டங்களையும் உலகெங்கும் திரள்நிலைப் போராட்டங்களாக *(Mass Protest)* வெளிப்படுத்தி வருகின்றனர்.

உலகின் பல்கலைக்கழக நகரமெனப் போற்றப்படும் ஒக்ஸ்ஸ்வேர்ட்டிலும், உலக கலாச்சாரங்களின் நகரமெனப் போற்றப்படும் இலண்டனிலும் கொரோனா தொற்று அச்சத்துக்கு நடுவிலும் பல்லாயிரக்கணக்கில் திரண்டு எழுந்த மக்கள் திரள்நிலை பிரித்தானிய காலனித்துவ காலம் உலகில் ஏற்படுத்திய அடிமைத்துவ கட்டமைப்புக்களும் ஆட்சி முறைமைகளும் மாற்றப்பட்டு சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் போற்றப்பட வேண்டும் என்கிற பிரான்சியப் புரட்சியின் புதிய வருகையாக மக்களின் இறைமை அரசாங்கத்தின் இறைமைசார் முடிவுகளை நெறிப்படுத்துவதே உண்மையான மக்களாட்சி முறைமை என்பதை மீண்டும் உலகுக்கு நிரூபித்துள்ளது.

இந்நேரத்தில் காலனித்துவ காலச் சின்னங்கள் மட்டுமல்ல காலனித்துவ சிந்தனையில் எடுக்கப்பட்ட காலனித்துவ கால முடிவுகளும் மறு ஆய்வுக்கு உள்ளாக்கப்பட வேண்டியது காலத்தின் தேவையாகிறது. ஏனெனில் காலனித்துவ காலத்தில் காலனித்துவ அரசுகள் செய்த தன்னிச்சையான அரசியல் தீர்மானங்களும் பொருளாதார முடிவுகளுமே இன்று உலகெங்கும் உள்நாட்டுப் போர்களும் அகதி நிலை வாழ்வுகளும் என்றுமில்லாத அளவுக்கு இந்த அறிவியல் உலகிலும் அதிக அளவில் காணப்படுவதற்கான மூல காரணங்களாக உள்ளன.

ஈழத்தமிழர்களின் சமகால வரலாறும் 1956 முதல் 2009 முள்ளிவாய்க்கால் இனஅழிப்பு வரை சிறீலங்கா சிறிய அளவிலும் பெரிய அளவிலும் தொடர்ச்சியாகச் செய்து வந்த ஈழத்தமிழின அழிப்புகளும் காலனித்துவம் எடுத்த தவறான முடிவுகளின் விளைவுக்கு நடைமுறை உதாரணங்களாகவே திகழ்கின்றன.

காலனித்துவம் எடுத்த தவறான முடிவு கள் கொடுத்த ஒற்றையாட்சிச் சிங்களப் பெரும்பான்மைப்பாராளுமன்ற மேலாண்மையைக்கொண்டே 2009 முதல் இன்று வரை ஈழத்தமிழினஅழிப்பையும் ஈழத் தமிழின கலாச்சார இனஅழிப்பையுமே தமது நோக்காகவும் போக்காகவும் கொண்டு அனைத்துலகச் சட்டங்களுக்கோ அனைத்துலக அமைப்புக்களின் நெறிப்படுத்தல்களுக்கோ இடந்தர மறுத்துத் தன்னிச்சையாக சிறீலங்கா பாராளுமன்ற கொடுங்கேகான்மை ஆடசியையே இலங்கைத் தீவில் தொடரவும் செய்கிறது.

எந்த சிறீலங்காப் படையினர் ஈழத்தமிழின அழிப்பினை நடாத்தினரோ அந்தப் படைத் தலைமைகளையே அரசாங்கத்தின் நிர்வாகத்தின் தலைமை களில் நியமித்து ஈழத்தமிழர்களை இனங் காணக் கூடிய அச்சத்துக்கு உள்ளாக்கும் பணியக ஆட்சியால் அவர்களின் அரசியல் பணிவை ஆயுத முனையில் சிறீலங்கா தொடர்ந்து பெற்று வருகிறது.

இதன்வழி ஈழத்தமிழரை ஆளும் உரிமையை சோல்பரி அரசியலமைப்பில் இருந்து தான் விலகி சிங்கள பௌத்த சிறீலங்கா குடியர

**சூ.யோ. பற்றிமாகரன்**




சைப் பிரகடனப்படுத்திய 22.05.1972 முதலே இழந்து விட்ட ஈழத்தமிழர்களை ஆளும் தனது ஆட்சி சட்டவிரோத ஆட்சியே என்ற உண்மையினை மறைத்து வருகிறது. அதே வேளை ஈழத் தமிழர்களின் தாயக, தேசிய, தன்னாட்சி உரிமைகளுக்குச் சான்றாக உள்ள தொல்லியல் மானிடவியல் வராலற்றியல், இலக்கிய சான்றுகளை வேகமாக அழித்தொழித்துத் தமிழர் தாயகப் பகுதிகளைச் சிங்கள நாடென வரலாற்றுத் திரிபுவாதம் செய்வதில் முழுஅளவில் ஈடுபட்டும் வருகிறது. இந்த ஈழத்தமிழினக் கலாச்சார அழிப்பு என்னும் தொடர் அரசியல் திட்டத்தின் இவ்வாண்டுக்கான திட்டச் செயற்பாடாக கிழக்கில் தொல்லியல் நிலங்களை இனங்காணவும் சிங்கள பௌத்த வரலாற்றுத் திரிபுவாதங்களை முறிடியக்க கூடிய வகையில் மாற்றியமைப்பதற்கென இரண்டு செயலணிகளை தனது படையணிகளால் வழி நடத்தப்படும், முழுவதும் சிங்களவரைக் கொண்டு கொரோனா தொற்றுச் சிக்கலில் உலகிருக்கும் துன்பநிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்தி மே மாதத்தில் இன்றைய அரச அதிபர் கோத்தபாயா அமைத்துள்ளார். இது காலனித்துவம் எடுத்த ஈழத்தமிழர்கள் குறித்த தவறான முடிவில் அவர் பெற்றுக் கொண்ட சிங்கள பௌத்த பெரும்பான்மைக் கொடுங்கோன்மை ஆட்சி வழியான அவரின் இன்றைய செயற்பாடு.

ஈழத்தமிழர்களின் தாயகமான இலங்கைத்தீவில் ஈழத்தமிழர்கள் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதலாக தங்களுக்கான மக்கள் இறைமையின் அடிப்படையில் தங்களின் பிரிக்கப்பட முடியாத பிறப்புரிமையான தன்னாட்சி உரிமையுடன் தனியான அரசுக்களை உருவாக்கி பாதுகாப்பான அமைதியுடன் வாழ்ந்து வந்தவர்கள். இலங்கைத்தீவு வரலாற்றுக் காலத்தில் கூட தனித்தனியான தமிழ் சிங்கள அரசர்களின் ஆட்சியில் இருந்து வந்ததே தவிர, என்றுமே ஒற்றையாட்சியில் இருந்ததாக பிரித்தானிய கால னித்துவ ஆட்சிதன் சந்தை மற்றும் இராணுவ நலனுக்காக ஒற்றையாட்சியை அங்கு பிரகடனப்படுத்தும் வரை வரலாறு இல்லை.

1796இல் தமிழர்களின் தேசியத் தன்மையின் தனித்துவத்தை உணர்ந்து சென்னையில் இருந்து தமிழகத்தையும் இலங்கையையும் ஒரே ஆட்சி அலகாகக் கொண்டு, ஒரே காசுப் பரிமாற்றத்துடன் ஆளத் தொடங்கிய பிரித்தானிய கிழக்கிந்திய கம்பெனி ஆட்சி தமிழர்கள் தனியான அரசியல் அலகு என்பதை உலகுக்கு வெளிப்படுத்தினர்.

1802இல் இலங்கைத் தீவை "சிலோன்" என்ற பெயரில் பிரித்தானிய முடிக்குரிய அரசாக இணைத்துக் கொண்ட பிரித்தானிய அரசு 1832 இல் தமிழர்களின் சிற்றரசாக இருந்து வந்த வன்னிச் சிற்றரசனான பண்டார வன்னியனைத் தோற்கடித்ததின் வழி ஈழத்தமிழர்களின் இறைமையின் மேலாளராக அவர்கள் வந்ததின் பின்னரே இலங்கைத் தீவில் தமது இறைமையை முழுதளவில் நிறுவிக் கொண்டனர்.

பிரித்தானியருக்கு முன்னர் இலங்கைத்தீவில் காலனித்துவ ஆட்சியை முதன்முதலில் ஏற்படுத்திய போர்த்துக்கேயர்கள் 1505 முதல் 1621 வரை இலங்கைத் தமிழர்களின் அரசான யாழ்ப்பாண அரசுடன் 116 ஆண்டுகள் தொடர்ந்து போராடியே ஈழத்தமிழர்களின் இறைமைக்குத் தாங்கள் மேலா

**தொடர்ச்சி 10பக்கம்**

## காலனித்துவ காலச் ... தொடர்ச்சி...

ளராக வந்தனர்.

தமிழ் மன்னர்களான சேன(Sena) குந்தக (Guttaka) என்போர் கி.மு 177-15 வரை 22ஆண்டுகள் அநுராதபுர அரசின் மன்னர்களாக விளங்கியுள்ளனர். அன்று முதல் எல்லாளன் ஈறாக அநுராதபுர அரசு தமிழர்களாலும் சிங்கள வர்களாலும் மாறி மாறி ஆளப்பட்டுள்ளது. அநுராதபுர அரசிலும் தமிழர்களின் இறைமை அரச உரிமையாகவும் இருந்தமைக்கான வரலாற்றுச் சான்றாக இவை உள்ளன. எல்லாளன்கி.மு145-101வரை44ஆண்டுகள் அநுராதபுரத்தை செங்கோன்மை தவறாது ஆட்சி புரிந்துள்ளான். இலங்கை அரசியல் வரலாற்றில் நீண்ட காலம் அரசு புரிந்த முடிமன்னனும் இவனே. ஐந்து தமிழர்களான புலகத்தா, பாகியா, பணயமாற, பிளையமாற, தாடிக என்போர் கி.மு 102-87 வரை 14 ஆண்டுகள் 7 மாதங்கள் அநுராதபுர அரசை ஆட்சி புரிந்துள்ளனர். மகாதீஸன் காலத்தில் அரசமரபைச் சாராத சோரநாக என்பவன் தனக்குப் புகலிடம் அளிக்காத புத்த விகாரைகளை தரைமட்டமாக்கினான் எனவும் இதனால் மகாதீஸனின் மனைவி அனுலா தேவி வடுக என்ற தமிழனை அரசனாக்கினான் எனவும் இவன் 1வருடம் 2மாதங்கள் கி.மு 47 இல் ஆட்சி புரிந்தான் எனவும் இவனை அனுலா தேவி கொன்று விட்டு அரண்மனைப் புரோகிதனாகிய நீலிய என்ற தமிழனை அரசனாக்கினான் எனவும் வரலாறு கூறுகிறது. தமிழாதேவி என்ற தமிழ்ப் பெண்ணின் கணவனான இளநாக கி.பி 38-44 ஆண்டுகளில் ஆறு ஆண்டுகள் அநுராதபுரத்தை ஆட்சி செய்தமை நாகர்களாகத் தமிழர்கள் இருந்த காலம் முதலே அநுராதபுரத்தில் தமிழர்க்கு ஆட்சியுரிமை தொடர்ந்து வந்ததின் வெளிப்பாடு என்பர்.



வங்கநாகதிஸ்ஸ ஆண்ட காலத்திலேயே கரிகாலச் சோழன் படையெடுப்பால் 12000 பேரை திருச்சிக்குக் கொண்டு சென்று காவேரியில் கல்லணை அமைத்தான் என்பது ஈழத்தமிழர்களின் நீர்முகாமைத்துவத் திறன் சோழ அரசால் பயன்படுத்தப்பட்ட வரலாறாக உள்ளது. கி.பி 5ஆம் நூற்றாண்டில் பண்டு, அவன் மகன் பரிந்த, குட்ட பரிந்த, திரிந்தர, தாட்டிக, பிட்டடிய, ஆகிய தமிழ் மன்னர்கள் அநுராதபுரத்தில் 27 ஆண்டுகள் ஆட்சி புரிந்துள்ளனர். இவர்களுடைய ஆட்சி கதிர்காமம் அறகம உட்படத் தென்னிலங்கை வரை பரவியிருந்துள்ளது. இந்த வரலாற்றுத் தகவல்களை எல்லாம் தரும் தொல்லியல் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள் இவர்கள் தென்னிந்தியர்கள் அல்ல இலங்கைத் தமிழர்களே என நாணயங்களை ஆய்வு செய்து நிறுவியும் உள்ளார். இவ்வாறாகத் தமிழ் மன்னர்களாலும் சிங்கள மன்னர்களாலும் மாறிமாறி ஆளப்பட்ட அநுராதபுர அரசில் தமிழருக்கு இருந்த இணைஇறைமை காரணமாக அநுராதபுரத்தில் பிரித்தானிய காலனித்துவ காலத்தில் கூட நகராண்மையில் தமிழர்களே தலைவர்களாக இருந்தனர். 1956இல் சொலமன் டயஸ் பண்டாரநாயக்கா என்ற ஆங்கிலப் பெயரைத் தாங்கி ஆங்கிலப் பல்கலைகழகத்தில் தன் சிந்தனையை உருவாக்கி உலக வல்லாண்மைகளுக்கு வளைந்து கொடுத்து ஆட்சி செய்யும் தந்திரோபாயத்தை தெரிந்து கொண்ட எஸ். டயிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவே 'எங்கள் நாடு – எங்கள் ஆட்சி – எங்கள் ஆகமம்' என்ற சிங்கள பௌத்த பேரினவாதக் கொள்கையை இலங்கைத்தீவின் அரசியல் கொள்கையாக்கி, இலங்கை சிங்கள நாடு சிங்களவரின் ஆட்சிக்கு உரிய நாடு – பௌத்த மதத்தினைப் பேணிடப் புத்தர் தந்த நாடு என்ற மகாவம்ச சிந்தனைக்கு ஏற்ப காலனித்துவ பிரித்தானியா தந்த அதிகாரத்தின் அடிப்படையிலேயே சிங்கள பௌத்த ஆட்சி நிலையைத் தோற்றுவித்தார். இவரே அநுராதபுரத்தில் தமிழ் நகராட்சித் தலைமை தொடர்ந்து வந்த நிலையினை மாற்றக் கூடிய வகையில் புதிய உள்ளூராட்சி எல்லைகளை வகுத்துத் தமிழர் அதிகமாக வாழ்ந்த பகுதிகளை எல்லாம் மாற்றியமைத்து அநுராதபுரத்தை முழுச் சிங்களப் பிரதேசமாக நிறுவிக் கொண்டவர். அவ்வாறே கண்டியின் கடைசி நாலு மன்னர்களும் தமிழர்கள் என்பதும் தமிழே கண்டியில் அரச மொழியாக இருந்தது என்பதும் வரலாறு. சிறிமாவோ பண்டாரநாயக்கா அவர்களின் பாட்டன் பிரித்தானியாவிடம் கண்டி அரசைக் கையளித்த சரணாகதி ஒப்பந்தத்தில் தமிழிலேயே ரத்வத்தை எனக் கையொப்பமிட்டமை இதனை மேலும் உறுதி செய்கிறது. கண்டி அரசின் கடைசி நான்கு தலைமுறை அரசர்களும் தமிழர் என்பதுடன் கண்டியில் தமிழ் அரச மொழியாகவும் இருந்துள்ளது. எனவே சிங்கள அரசுக்களின் உருவாக்கத்தில் கூடத் தமிழர்களின் இறைமைக் கூட்டை இலங்கைத்தீவின் வரலாற்றில் தெளிவாகக் காணலாம்.

காலனித்துவ காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையாக இருந்த டி. எஸ். சேனநாயக்காவே சோல்பரி அரசியலமைப்பில் ஈழத் தமிழர்களின் இறைமை சிங்களர்களின் இறைமையுடன் இணைந்து இலங்கைத்தீவுக்குச் சுதந்திரம் கொடுப்பது தொடர்பான எதிர்ப்பைத் தெரிவிக்க மாட்சிமைக்குரிய மகாராணி அவர்களைச் சந்திக்கச் சென்ற அன்றையத் தமிழ்த் தலைவரான ஜி.ஜி. பொன்னம்பலத்தை காலனித்துவ உயர் அதிகாரிகளைக் கூடச் சந்திக்க அனுமதிக்காத சூழ்நிலையை உருவாக்கி தங்கள் விருப்புப்புடி சிங்கள பௌத்த மேலாண்மையிடம் ஈழத் தமிழர்களின் உரிமைகளை காலனித்துவ பிரித்தானியா ஒப்படைக்கச் செய்தவர். இதற்காக இலண்டன் ரிசர்வ் வங்கியில் தேயிலை, இறப்பர், கொக்கோ, கோப்பி போன்ற பெருந்தோட்ட உற்பத்திப் பொருட்களின் உலக விற்பனையால் வைப்பு செய்யப்பட்டிருந்த பெருந்தொகையான பணத்தைத் தங்களுக்குத் தரவேண்டாம் எனப் பேரம் பேசியே ஈழத்தமிழர்கள் விடயத்திலும் மலையகத் தமிழர்கள் விடயத்திலும் பிரித்தானியக் காலனித்துவம் தவறான முடிவுகளை எடுக்க வைத்தார் என்பது வரலாறு.

இலங்கையில் பிரித்தானிய கடற்படையில் வைத்தியராகக் கடமையாற்றிய எஸ் பொன்னையா என்னும் தமிழகத்தின் தென்னார்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். பொன்னையா அவர்கள் 01.09.1944இலே காலனித்துவச் செயலாளராக இருந்த ஒலிவர் பிரெட்ரிக் ஜோர்ஜ் ஸ்டான்லி அவர்களுக்கு அனுப்பிய கோரிக்கை மனுவில் தமிழ் இலங்கைக்கும் மிகுதியாக இருந்த சிலோனுக்கும் (Tamil Ceylon and the rest of Ceylon) இடையில் இருந்த வேறுபாடுகளை மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டினார். இஸ்பெயினுக்கும் போர்த்துக்கல்லுக்கும் இடையில், நோர்வேக்கும் சுவிடனுக்கும் இடையில், ஹொலந்துக்கும் பெல்ஜியத்திற்கும் இடையில், ஈக்குடோர்க்கும் பிறேசிலுக்கும், உள்ஸ்டருக்கும் மிகுதியான அயர்லாந்துக்கும் இடையில், உள்ள வேறுபாடுகளை விட தமிழ் இலங்கையருக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன, ஆகையால் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டு தமிழ் இலங்கையை பிரித்தானிய காலனித்துவம் பிரகடனப்படுத்தினாலேயே தமிழ் இலங்கை, இந்தியாவுக்கும் சிங்கள நாட்டிற்கும் இடையிலான பாலமாகவும் அந்நாடு திகழும் என வலியுறுத்தியிருந்தார். அத்துடன் இக்காலகட்டத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் தலைவராக இருந்த ஜி.ஜி. பொன்னம்பலம் அவர்கள் சோல் பரி ஆணைக்குழுவுக்கு அனுப்பிய மனுவில் இலங்கைத் தமிழர்கள் சிங்கள அரசுக்களின் உருவாக்கத்திற்கு அளித்த பங்களிப்புக்களைத் தெளிவாகச் சுட்டிக்காட்டி இலங்கை முழுவதும் 50க்கு 50 என்ற வீதத்தில் தமிழ்ச் சிங்கள இறைமை இருப்பதைத் தெளிவாக்கினார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசின் பொதுச் செயலாளராக இருந்த சுப்பிரமணியம் அவர்கள் சிறியதேசியங்களின் தன்னாட்சிக்கு மதிப்பளிக்கும் பிரித்தானிய காலனித்துவம் தமிழர்களின் தன்னாட்சிக்கு மதிப்பளித்து கூட்டாட்சி முறைமையை உருவாக்க வேண்டுமெனவும் கேட்டிருந்தார்.

எனவே இலங்கைத்தீவில் தமிழர் பிரச்சினை (Tamil's Question) என்பது காலனித்துவ பிரித்தானியா அரசின் தவறான முடிவு உருவாக்கிய அனைத்துலகப் பிரச்சினை. இலங்கையின் இறைமைக்குள் என்றுமே தீர்வு பெற இயலாத பிரச்சினை. ஆதலால் காலனித்துவச் சின்னங்கள் குறித்து மறு ஆய்வு என்பது உலகப் பொதுமையாக வளரும் இக்காலத்தில் காலனித்துவ அரசுகளின் தவறான முடிவுகள் குறித்த மறு ஆய்வுகளும் தொடங்கப்பட்டு உலகின் பாதுகாப்பான அமைதி வாழ்வு மீள் உருவாக்கப்படல் அவசியம்.

• • •



# திருச்சி மத்திய சிறையில் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் ஈழத் தமிழர்கள்

இந்திய சிறைகளில் பல ஈழத் தமிழர்கள் சொல்லொணா துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள சிறப்பு முகாமில் பல வெளிநாட்டவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் கடந்த 08ஆம் திகதி முதல் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர். சிறை நிர்வாகம் சார்பில் வழங்கப்பட்ட உணவையும் அவர்கள் சாப்பிட மறுத்து விட்டனர். இது பற்றி தகவல் அறிந்த திருச்சி உதவி கலெக்டர் விஸ்வநாதன் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். ஆனால் எந்த தீர்வும் ஏற்படவில்லை. இதையடுத்து மருத்துவ குழுவினர் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்

ஈழத் தமிழர்கள் 52 பேர் அடங்கலாக வங்கதேசம், ரஷ்யா, பல்கேரியா உட்பட பல வெளிநாட்டவர்கள் இங்கு உண்ணாவிரதம் இருந்து வருகின்றனர். இவர்கள் தங்களை தற்காலிக பிணையிலாவது விடுவிக்க வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இவர்கள், முதலில் சென்னை புழல் சிறையில் சிறை வைக்கப்பட்டிருந்தனர். பொய் வழக்குகள் போட்டும், காரணமின்றி தங்களை தடுத்து வைத்துள்ளதாகவும், தங்களின் தண்டனைக் காலம் முடிவடைந்த பின்னர் நீதிமன்ற உத்தரவின்படி சிறப்பு முகாமிற்கு மாற்றப்படுவதாகக் கூறி தங்களை திருச்சி மத்திய சிறையிலுள்ள சிறப்பு சிறைச்சாலையில் தடுத்து வைத்திருப்பதாக கூறுகின்றனர். சட்டவிரோதமாக நாட்டை விட்டு வெளியேற முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையிலேயே இங்குள்ள ஈழத் தமிழர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். வெளிநாடுகள் செல்வதற்கு இந்திய கடவுச்சீட்டு பெற்றது, கடல் மார்க்கமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டது போன்றவையே இவர்களின் குற்றச்சாட்டாக இருக்கின்றது.

தற்போது திருச்சி சிறப்பு முகாமில் உண்ணாவிரதம் இருப்போருக்கு ஆதரவாக திருச்சி, புதுக்கோட்டை, தருமபுரி, ஈரோடு உட்பட தமிழ்நாடு முழுவதும் உள்ள பல்வேறு இலங்கைத் தமிழர் அகதி முகாம்களில் உள்ள குடும்பத்தினர், உறவினர்களும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறப்பு முகாமில் உள்ள தங்களது குடும்பத்தினரை விடுதலை செய்யக்கோரி கண்ணீர் மல்க அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவர்களின் உண்ணாவிரதம் பற்றி கருத்து தெரிவித்த சிறைத்துறை, இதற்கான தீர்வை மத்திய, மாநில அரசுகளே மேற்கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளது.

இதேவேளை இதே கோரிக்கையை வலியுறுத்தி கடந்த ஏப்ரல் 17 - 19ம் தேதி வரை உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. அதைத் தொடர்ந்து, ஒரு மாதத்தில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக தனித்துணை ஆட்சியர் மற்றும் கியூ பிரிவு போலீசார் உறுதியளித்ததையடுத்து அவர்கள் தங்கள் உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டனர். ஆனால், இப்போதுவரை அவர்களை விடுவிக்கவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது. இதனாலேயே மீண்டும் அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

**கல்யாணி**

மேலும் 2019 நவம்பர் மாதம் 70 அகதிகள் இதே சிறப்பு முகாமில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தனர். தாம் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும், தமக்கு போதிய அடிப்படை வசதிகளோ, உணவோ கிடைப்பதில்லை என்றும் கூறி உண்ணாவிரதத்தை மேற்கொண்டிருந்தனர். இவர்களில் 19பேர் தற்கொலை முயற்சியில் ஈடு பட்டிருந்தனர். அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று மீண்டும் சிறைக்கு அனுப்பப்பட்டிருந்தனர் என்பதும் குறிப் பிடத் தக்கது.

அத்துடன் 2015ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இதே திருச்சி சிறப்பு முகாமில் தடுப்பில் இருந்த ஈழத் தமிழர் ஒருவரும், அவரின் மனைவியும் தற்கொலை முயற்சி மேற்கொண்டு, ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. குறித்த நபர் 3 வருட காலமாக காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகவும், அவரைப் பார்க்க வந்த மனைவி அவருடன் சிறை அறையில் தூக்க மாத்திரைகளை அதிகமாக உட்கொண்டு உயிர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர்களின் உண்ணாவிரதம் பற்றி தமிழக அரசோ, அல்லது ஊடகங்களோ கண்டு கொள்ளாதவாறே நடந்து கொள்கின்றன. மேலும் இது தொடர்பான செய்திகளை ஊடகங்கள் வெளியிடுவதை தவிர்த்தே வருகின்றன. ஆனால் நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் அவர்கள் 13ஆம் திகதி அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார். அதில்

"தண்டனைக் காலம் முடிந்தும் விடுதலை செய்யப்படாத ஈழத் தமிழர்கள் உள்ளிட்ட 52பேர் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கும் நிலையில், அவர்களை உடனடியாக தமிழக அரசு விடுதலை செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார். அந்த அறிக்கையில் மேலும், திருச்சி மத்திய சிறை வளாகத்திலுள்ள சிறப்பு முகாமில் ஈழத்தமிழர்கள் 31 பேர் உள்ளிட்ட 52 பேர் சாகும் வரைப் பட்டினிப் போராட்டத்தில் ஈடுபட்ட செய்தி பெரும் அதிர்ச்சியையும், ஆழ்ந்த மன வேதனையையும் தருகிறது. தங்களை விடுவிக்கக் கோரி அறப்போராட்டத்தைத் தொடங்கியுள்ள அவர்களது கோரிக்கை மிக தார்மீகமானது. நியாயமானது. அதனை நாம் தமிழர் கட்சி முழுமையாக வரவேற்கிறது.

சட்டவிரோதமாக வெளிநாடு தப்ப முயன்றது தொடர்பான வழக்குகளில் கைது செய்யப்பட்டுள்ள இவர்கள் தண்டனைக்காலம் முடிந்த பின்னும் விடுவிக்கப்படாமல் சிறைப்படுத்தப்பட்டும், பொய் வழக்குகளின்கீழ் அடிக்கடி கைது செய்யப்பட்டும் வருகிறார்கள். தற்போதைய கொரோனா அச்சம் நிகழும் சூழ்நிலையில் இவர்கள் தற்காலிகமாக பிணையிலாவது விடுவிக்கப்பட வேண்டுமென நாம் தமிழர் கட்சி சார்பாக கேட்டுக் கொள்கிறேன்" எனக் கேட்டுள்ளார்.

இந்தியாவில் இருக்கும் ஈழத் தமிழர்கள் எல்லோருமே சிறையில் இருப்பது போன்றே இருக்கின்றார்கள். அவர்கள் தங்கள் விருப்பப்படி எந்த ஒரு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாதவர்களாகவே உள்ளனர். இதனாலேயே அவர்கள் நாட்டை விட்டு வேறு நாடுகளுக்கு இந்திய நாட்டின் அனுமதியில்லாமல் வெளியேற முற்படுகின்றார்கள். அப்படி செல்லும் அவர்கள் சில சமயங்களில் உயிரையும் துறக்கிறார்கள். வேறு சிலர் காணாமல் போகின்றார்கள். இன்னும் சிலர் இந்திய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு இப்படி சிறைகளில் வாடுகின்றார்கள். சொந்த நாட்டிற்கு செல்ல முடியாமல் இங்கு தவிக்கும் இவர்கள் இப்படியான பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். உயிரைத் துச்சமென மதித்து வெளியேற முற்படுகின்றார்கள் என்றால், இந்த நாட்டில் அதைவிட அவர்கள் பல கொடுமைகளை அனுபவிக்கின்றார்கள் என்பதே உண்மையாகும்.

கொரோனா தொற்று காரணமாக சிறையிலிருந்து ஆயிரக் கணக்கானோர் விடுவிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் கொலைக் குற்றங்களில் ஈடுபட்டவர்களும் உள்ளடங்குவர். ஆனால் குற்றங்களுக்கான தண்டனைக் காலம் முடிவடைந்தும், உறுதிப்படுத்தப்படாத குற்றங்களுக்காகவும் ஈழத் தமிழர்கள் இந்திய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளதை எவரும் கேட்க முடியாத நிலையில் அவர்களின் காலம் கடக்கிறது.



திருச்சி சிறையிலிருக்கும் தண்டனைக் கைதிகளின் குடும்பத்தின் நிலையை நினைத்து அவர்கள் ஏங்கித் தவிக்கிறார்கள். அந்தக் குடும்பத்தில் இவர்கள் தான் சில சமயங்களில் உழைப்பாளிகளாக இருந்திருக்கக்கூடும். அப்படி இருக்கும் பட்சத்தில் தற்போது அவர்களின் குடும்ப நிலையை கூறவே முடியாது. கொரோனா ஊரடங்கு வேளையில் அவர்களின் குடும்பங்கள் பல இன்னல்களை அனுபவிக்க நேரிடும்.

காந்தி பிறந்த நாடு, காந்தி அகிம்சை வழியில் போராடி நாட்டிற்கு சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார் என்றெல்லாம் முழக்கமிட்டு காந்தியின் பிறந்த தினம், நினைவு தினம் ஆகியவற்றையெல்லாம் பெரும் எடுப்பில் கொண்டாடி வரும் இந்திய அரசு, இங்கு நடக்கும் அகிம்சை வழிப் போராட்டங்களை மதிப்பதும் இல்லை. அவற்றைக் கண்டு கொள்வதும் இல்லை. மாறாக போராட்டக்காரர்களை அடக்கி ஒடுக்கி விடவே முற்பட்டு வருகின்றது.

இந்தியாவின் அகிம்சையை மதிக்கும்

தொடர்ச்சி 12பக்கம்

# தமிழ் மக்களின் வரலாறும் பண்பாடும் பாதுகாக்கப்பட வேண்டும்

**மக்களை அழித்தல், மொழியை அழித்தல், வரலாற்றை மீண்டும் எழுதுதல் என்பனவே இலங்கையில் நிகழ்கின்றது. அர்மேனியாவில் நிகழ்ந்த இனஅழிப்பு உட்பட பல நாடுகளில் இதுவே நிகழ்ந்தது. அதுவே தமிழ் மக்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே தான் பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த தமிழ் மொழி, தமிழ் மக்களின் வரலாறு மற்றும் கலாச்சாரம் முக்கியமானது என்பதுடன், அவை பாதுகாக்கப்பட வேண்டும் என அவுஸ்திரேலியாவின் நாடாளுமன்ற உறுப்பினர் கெக் மக்டேமொட் தெரிவித்துள்ளார்.**

**அவுஸ்திரேலிய தமிழ் தொலைக்காட்சிக்கு அவர் வழங்கிய நேர்காணலில் முக்கிய பகுதிகள் வருமாறு:**

**நேர்காணல் மேற்கொண்டவர்: அவி,**
நியூசவுத் வேல்ஸ் பணிப்பாளர்,
அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ்




"நான் 2015ஆம் ஆண்டில் இருந்து தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்படும் இனஅழிப்பு தொடர்பில் பேசி வருகின்றேன், உள்நாட்டு போருக்கு முன்னர் இலங்கை அரசு மேற்கொண்டு வந்த இனப்பாகுபாடு தொடர்பிலும் பேசி வருகின்றேன். போரில் தப்பியவர்களை சந்தித்து பேசியுள்ளேன். இலங்கையின் இனப்படுகொலை தொடர்பில் பெருமளவான ஆதாரங்கள் உள்ளன.

மனித உரிமை மீறல்கள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணியை பல வருடங்களாக மேற்கொண்டு வருகின்றேன். சிரியா உட்பட பல நாடுகள் தொடர்பில் நான் கவனம் செலுத்தி வருகின்றேன். பாலியல் துன்புறுத்தல்கள், அச்சுறுத்தல்கள், போர்க் குற்றங்கள், இனப்படு கொலை போன்றவற்றை இலங்கை அரசு மேற்கொண்டுள்ளது. நான் சரியான பாதையில் தான் செல்கிறேன். தமிழ் சமூகம் எனக்கு பின்னால் நிற்பது எனக்கு மிகிழ்ச்சி தருகின்றது.

பிரித்தானியாவின் சனல் - 4 தொலைக்காட்சி நிறுவனம் இலங்கை அரசின் போர்க் குற்றங்கள் தொடர்பில் மிகவும் காத்திரமாக ஆவணப் படுத்தலை மேற்கொண்டுள்ளது. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கவில்லை, எனவே நடவடிக்கை தேவை என்பதை வலியுறுத்தி என்னைப் போலவே கனடா, இந்தியா, பிரித்தானியா உட்பட பல நாடுகளில் உள்ளவர்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இனப்படுகொலை என்பது இலங்கை சுதந்திரம் அடைந்த பின்னரே ஆரம்பமாகி விட்டது.

இது அரசியல் கட்சிகள் கடந்த விடயம். ஒரு ஜனநாயக நாட்டில் உள்ள எந்த கட்சியும் இனப்படுகொலையை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே தமிழ் மக்களுக்கான நீதியை பெற்றுக் கொடுப்பதில் அவுஸ்திரேலியாவில் உள்ள எல்லா கட்சிகளும் பங்கெடுக்க வேண்டும்.

எனக்கு எதிராக சிங்களவர்கள் சேகரித்த கையெழுத்து நடவடிக்கையில் கையொப் பமிட்டவர்களில் பெரும்பாலானவர்கள் அவுஸ்திரேலியாவை சார்ந்தவர்கள் அல்ல, அவர்கள் வேறு நாடுகளில் வசிப்பவர்கள். எனவே இந்த நடவடிக்கையை இலங்கை அரசே ஒருங்கிணைத்துள்ளது என்பது தெளிவாகின்றது. ஆனால் தற்போது எனது கோரிக்கைக்கு ஆதரவாக ஒரு இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கையெழுத்திட்டுள்ளனர். இது மிகப்பெரும் ஆதரவு.

இலங்கை அரசு மேற்கொண்ட போர்க் குற்றங்கள் தொடர்பில் அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது. இலங்கை படை அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடை விதித்துள்ளது. எமது நாட்டுக்கும் அவர்கள் வரமுடியாத நிலை ஏற்பட வேண்டும். ஐ.நா தீர்மானங்களை கொண்டு வந்துள் ளது. ஆனால் அதனை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் உள்ளன. இலங்கை அரசு அதனை மறுத்து வருகின்றது.



எனக்கு எவ்வாறு தமிழ் மக்கள் சந்தித்த இன அழிப்பு தொடர்பில் விழிப்புணர்வு ஏற்பட்டது என்பதற்கு ஒரு சிறிய கதை உண்டு. நான் ஏறத்தாள 300 தமிழ் மக்களை தற்செயலாக சந்தித்திருந்தேன். அவர்கள் அனைவரும் போரில் பாதிக்கப்பட்டவர்கள். அவர்கள் தமது கதைகளை கூறினார்கள், உறவுகளை இழந்த அவர்கள் அனைவரும் சாட்சிகளே. அதுவே என்னை மிகவும் பாதித்தது. அதுவே என்னை இந்த நடவடிக்கைக்கு தூண்டியது. அப்போது தான் நான் உண்மையை உணர்ந்து கொண்டேன். பின்னர் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் நான் விழிப்புணர்வு நடவடிக்கையை ஆரம்பித்திருந்தேன்.

நான் தமிழர், இனப்படுகொலை எனது அடையாளம் என்ற நடவடிக்கை ஒன்று, பாடசாலை மட்டத்தில் கனடாவில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் நான் அறிவேன். தமிழ் மொழி பாடத்தை அவுஸ்திரேலியாவில் உள்ள பாடசாலைகளில் ஆரம்பிக்க வேண்டும் என நான் முன்னர் கோரிக்கை விடுத்திருந்தேன்.

**கெக் மக்டேமொட்**



மக்களை அழித்தல், மொழியை அழித்தல், வரலாற்றை மீண்டும் எழுதுதல் அதுவே இலங் கையில் நிகழ்ந்து வருகின்றது. அர்மேனியாவில் நிகழ்ந்த இனஅழிப்பு உட் பட பல நாடுகளில் இதுவே நிகழ்ந்தது. அதுவே தமிழ் மக்களுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்படுகின்றது. எனவே தான் பல ஆயிரம் வருடங்கள் பழமை வாய் ந்த தமிழ் மொழி, தமிழ் மக்களின் வரலாறு மற்றும் கலாச்சாரம் முக்கியமானது என்பதுடன் அவை பாது காக்கப்பட வேண்டும்.

என்னை வெள்ளை ப்புலி, பயங்கரவாதி என்று எல்லாம் இலங்கை அரசுக்கு சார்பானவர்கள் அழைத்தார்கள், நான் இதனை தேர்தல் வெற்றிக்காக மேற்கொள்ளவில்லை ஏனெனில் கடந்த காலத் தில் நான் எல்லா தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருந்தேன். நான் இதனை வாக்குகளுக்காக செய்யவில்லை. மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலை தொடர்பாக நான் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றேன்.

நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பதால் இதனை பல மட்டங்களில் கொண்டு செல்ல முடிகின்றது. அது எனது நடவடிக்கைக்கு சாதகமாக உள்ளது" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

• • •

### திருச்சி மத்திய ... தொடர்ச்சி...

தன்மை பற்றி ஈழத் தமிழர்கள் 1987ஆம் ஆண்டே புரிந்து கொண்டனர். 15 செப்டெம்பர் 1987இல் இந்தியாவிடம் நீதி கேட்டு 5 அம்சக் கோரிக்கையை முன்வைத்து அகிம்சைப் போராட்டத்தில் இந்தியாவை வெல்ல முடியும் என்று நினைத்து நீராகாரம் இல்லாது உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடுபட்ட தியாக தீபம் திலீபன் அவர்களை ஈழ மக்கள் பார்த்துக் கொண்டிருக்க சாகடித்தது இந்திய அரசு. அத்துடன் சமாதானப்படை என்று ஈழம் வந்த இந்தியப் படை அங்கு மக்களை அழித்து அட்டூழியம் மேற்கொண்டதை தற்போதும் உலக தமிழ் மக்கள் மறக்க மாட்டார்கள். அகிம்சை, ஆன்மிகம் இவையெல்லாம் இந்தியாவில் இருந்தாலும் அவற்றை அவர்கள் மதிப்பதில்லை என்பதே உண்மை.

### தொல்லியல் மரபுரிமை ... தொடர்ச்சி...

எனக்குத் தெரியவில்லை. இது தொடர்பாக ஆங்கிலத்திலும். தமிழிலும் செய்திகள், பல கட்டுரைகள் வெளிவந்திருக்கின்றது. சில விடயங்கள் மக்கள் மத்தியிலே செல்லும் போது எங்களின் மரபுரிமையைப் பற்றி நாம் அறிவது மட்டுமல்லாமல் அவற்றை பாதுகாக்க வேண்டும் என்னும் விழிப்புணர்வு ஏற்படும் என்பது எனது கருத்தாகும்.

ஆகவே எங்கள் தமிழ் மக்களின் தொன்மையான தொடர்ச்சியான வரலாற்றை கண்டறிவதற்கான ஆதாரங்கள் கிடைத்து வருகின்றன. அது மக்களிடம் எவ்வாறு செல்கின்றது என்பதில் தான் ஒரு தொய்வு நிலை காணப்படுகின்றது.

# மக்களை அடிமைகளாக நடத்தி
## ஆட்சி புரிந்தவர்களின் சிலைகள் அகற்றப்படுகின்றன

அமெரிக்காவின் மினப்பொலிஸ் பிரதேச காவல்துறையினரின் கைகளில் சிக்கி ஜோர்ச் பிளாய்ட் மரணித்ததைத் தொடர்ந்து உலகில் பரவி வரும் நிறவெறி எதிர்ப்பு போராட்டங்களின் தொடர்ச்சியாக உலக நாடுகளில் உள்ள நகரங்களில் வைக்கப்பட்டுள்ள நிறவெறி கொள்கையை பின்பற்றிய மற்றும் மக்களை அடிமைகளாக நடத்தியவர்களின் சிலைகளை அகற்றும் பணிகளை போராட்டக்காரர்கள் மேற்கொண்டு வருகின்றனர். அமெரிக்காவில் உள்ள கூட்டமைப்பு நினைவுச் சின்னங்களை அகற்றியவர்கள் தற்போது ஐரோப்பாவை நோக்கி நகர்ந்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளில் ஐரேப்பியா நாடுகளில் இடம்பெறும் சம்பவங்களை இங்கு தருகின்றோம்.

### பிரித்தானியா:



**எட்வேட் கோல்ஸ்ரன்**


*17 ஆம் நூற்றாண்டில் அடிமைகளை பிரித்தானியாவின் பணிக்கு பிறிஸ்ரல் துறை முகத்திற்கு கொண்டு வந்தவர். 80,000 மேற்பட்ட ஆபிரிக்க மக்களை அடிமைகளாக அழைத்து வந்திருந்தார். கடந்த வாரம் இவரின் சிலை கடலில் தூக்கி வீசப்பட்ட போதும், தற்போது பிரித்தானிய அரசு அதனை மீட்டு தொல்பொருள் அருங்காட்சியகத்தில் வைத்துள்ளது.*

**ஹென்றி டுன்டாஸ்**

*18 ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் ஸ்கொட்லாந்து அரசியல்வாதியாக இருந்த இவர் அடிமைச் சட்டத்தின் நீக்கத்தை எதிர்த்தவர். இதனால் ஏற்பட்ட கால இடைவெளியில் 500,000 ஆபிரிக்க மக்கள் அடிமைகளாக அத்திலாந்திக் சமுத்திரத்தை கடந்து கொண்டு வரப்பட்டனர். ஸ்கொட்லாந்தின் தலைநகர் எடின்பரோவில் உள்ள இவரின் சிலை அகற்றப்படவேண்டும் எனவும், அவரின் நினைவாக கனடாவின் ரொரன்டோ நகரில் உள்ள வீதிக்கு சூட்டப்பட்ட பெயர் மாற்றப்பட வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.*

**றொபேட் பேடன் பவல்**

*சாரணர் இயக்கத்தை ஆரம்பித்த இவர் ஒரு இனவாதி என்பதுடன் ஜேர்மன் சர்வதிகாரி கிட்லருக்கு ஆதரவான கருத்தை கொண்டவர். இவரின் சிலையை அகற்றுவது தொடர்பில் அதிகாரிகள் சிந்தித்து வருவதுடன், பிரித்தானியாவின் பல நகரங்களில் உள்ள சிலைகளை மீளாய்வு செய்யவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.*



**சிலில் றொடெஸ்**

*தென்ஆபிரிக்காவின் கேப் பிரேதேசத்தில் காலனித்துவ பிரதமராக பதவி வகித்தவர். வைரம் மற்றும் தங்க சுரங்கங்களில் ஆபிரிக்க மக்களை அடிமைகளாக பணிக்கு வைத்திருந்தவர். இவரின் சிலை 2015 ஆம் ஆண்டு ஆபிரிக்காவின் கேப் நகரில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.*

*எனினும் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்ற அவருக்கு அங்கு வைக்கப்பட்டுள்ள சிலையை அகற்ற வேண்டும் என்ற கோரிக்கைகள் தற்போது எழுந்துள்ளது.*

**றொபேட் மிலிகன்**

*18 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த வர்த்தகர் இவர். ஜமேக்காவில் இரண்டு சக்கரை ஆலைகளை நடத்தியதுடன், 500 அடிமைகளை அங்கு பணியில் அமர்த்தியிருந்தார். அவரின் சிலை இந்த வாரம் லண்டனில் அகற்றப்பட்டுள்ளது.*


### பெல்ஜியம்:



**அரசர் லிபோல்ட் இரண்டு**

*1865 தொடக்கம் 1909 வரை பெல்ஜியத்தை ஆட்சி புரிந்தவர். கொங்கோ நாட்டை தனது சுய தேவைக்காக பயன்படுத்தியவர். மிருகத்தனமான துன்புறுத்தல்களை மேற்கொண்டு 10 மில்லியன் மக்களை அங்கு படுகொலை செய்தவர். இவரின் சிலைகள் பல சேதமாக்கப்பட்டுள்ளதுடன், பல வர்ணமைகள் பூசப்பட்டு சேதமாக்கப்பட்டுள்ளன.*

### ஸ்பெயின்:



**கிறிஸ்தோபர் கொலம்பஸ்**

*15 ஆம் நூற்றாண்டு வாழ்ந்த இவர், அமெரிக்காவை கண்டறிந்து குடியேற்றங்களுக்கு வழி அமைத்தவர். அவரின் சிலை அமெரிக்காவிலும், ஸ்பெயினிலும் ஆர்ப்பாட்டக்காரர்களின் தாக்குதல் முயற்சிக்கு உட்பட்டிருந்தது. கொலம்பஸ் நினைவு நளையும் அமெரிக்க பூர்வகுடி மக்கள் எதிர்த்து வருகின்றனர்.*

**ஜெனரல் பிரான்சிஸ்கோ பிரான்கோ**

*ஸ்பெயினை 35 ஆண்டுகள் ஆட்சி செய்த சர்வாதிகாரி. இவரின் உடல் கடந்த வருடம் அரும்பொருட் காட்சிப்படுத்தலில் இருந்து அகற்றப்பட்டு சிறிய தேவாலய வளாகத்தில் புதைக்கப்பட்டுள்ளது.*

### பிரான்ஸ்:



**ஜீன் பபிரிஸ்ற் கொல்பேட்**

*பிரான்ஸ் அரசர் 14 ஆவது லூயிஸ் காலத்தில் 17 ஆம் நூற்றாண்டில் அமைச்சராக இருந்த இவர் கறுப்பு இனத்தவர்களுக்கு எதிராக அடிமைச்சட்டத்தை வரைவதில் முன்னின்றவர். பிரான்ஸ் நகரசபை முன் உள்ள இவரின் சிலையை அகற்றுவதற்கு கடந்த வாரம் ஆர்ப்பாட்டக்காரர் முயற்சி எடுத்திருந்தனர்.*

**ஜேசெப் கலினி**

*19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பிரான்ஸ் நாடு ஆக்கிரமித்திருந்த மடகஸ்கார் பகுதியில் போராட்டங்களை மேற்கொண்டவர்களை மிருகத்தனமாக அடக்கிய படைத் தளபதி இவர். இவரின் சிலையை தற்போது பிரான்ஸ் காவல்துறையினர் பாதுகாத்து வருகின்றனர்.*

**விக்ரர் சொல்செர்**

*பிளொய்டின் மரணத்திற்கு முன்னரே இவரின் சிலை அகற்றப்பட்டுள்ளது. கரீபி யன் தீவுகளில் இருந்த பிரான்ஸ் நாட்டின் ஆக்கிரமிப்பு பகுதிகளில் உள்ள அடிமைச்சட்டத்தை நீக்குவதற்கு உதவியவர் என்ற போதும் அவரின் செயற்பாடுகளில் அடிமைத்தனத்தை ஆதரித்ததற்கான சான்றுகள் உள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.*

### இத்தாலி:

**இன்ரோ மொன்ரநெலி**

*வட ஆபிரிக்காவில் இத்தாலியின் ஆக்கிரமிப்பின் சின்னம். 12 வயது எதியோப்பிய சிறுமியையும் அடிமையாக வைத்திருந்தார். இவரின் சிலை அகற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுத்துள்ளன.*


### நெதர்லாந்து:

**ஜான் பிரெர்ஸ்சூன் கொயின்**

*17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இவர், கிழக்கிந்திய நிறுவனங்கள் மூலம் கிழக்கு இந்தியா, இந்தோனேசியா போன்ற பகுதிகளை ஆக்கிரமித்தவர். இந்தோனேசியாவின் பண்டா தீவுகளில் மேற்கொள்ளப்பட்ட பெருமளவான படுகொலைகளுக்கு உத்தரவிட்டவர். தற்போது இவரின் சிலையை அகற்ற தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

தகவல் உதவி: அசோசியட் பிரஸ் - தமிழில்: பிரபா

# கண்ணுக்குத் தெரியாத மனிதரை உருவாக்குதல் சாத்தியமா?




மனித கலங்களில் மாற்றம் செய்து கண்ணுக்குத் தெரியாத மனிதரை கொண்ட ஒரு விஞ்ஞான புனை கதையை யதார்த்தமாக மாற்ற முடியும் என தெரிவிக்கிறார் விஞ்ஞானி அலன் கொரோடெஸ்கி. இவர் "இயற்கை தகவல் தொடர்பு" பத்திரிகையின் முன்னணி ஆசிரியரும், கலிபோர்னியா பல்கலைகழகத்தின் இர்வின் வளாக இரசாயன மற்றும் உயிரியல் பொறியியல் துறை இணைப் பேராசிரியரும் ஆவார்.



*1897இல், எச்.ஜிவெல்ஸினால்(H.G. WELLS) கற்பனையாக தோற்றுவிக்கப்பட்ட கண்ணுக்கு தெரியாத மனிதன் எனும் கதாபாத்திரம்(THE INVISIBLE MAN) இப்போது, 120 ஆண்டுகளுக்கு பின்னர், சாத்தியமாகலாம் என விஞானிகள் நம்புகின்றனர்*

*எச்.ஜி.வெல்ஸின் கதையால் ஈர்க்கப்பட்ட விஞ்ஞானிகள், முதல் அடியை எடுத்து வைத்துள்ளனர் எனலாம். ஒளியியலில் ஒளி தெறிப்பு சுட்டி என்பது ஒரு மேற்பரப்பில் ஓர் ஒளிக்கதிர் படும் போது எத்தனை வீதமான கதிர்கள் தெறிப்படையும் அல்லது ஒரு பொருளின் வழியாக எவ்வளவு வேகமாக ஒளி பயணிக்கிறது என்பதை விவரிக்கும் ஒரு எண். தோலின் ஒளி தெறிப்பு சுட்டியை(சுமார்1.4) காற்றின் ஒளித்தெறிப்பு சுட்டியின் அளவுக்கு(சுமார் 1) மாற்றுவதன் மூலம் கண்ணுக்குத் தெரியாத மனிதனை உருவாக்க முடியும் என ஓர் விஞ்ஞானி விளக்குவது போல் வெல்ஸின் கற்பனை அமைந்திருந்தது. அந்த எண்ணம் உண்மையான அறிவியலை அடிப்படையாக கொண்டது. ஒரு பொருளின் ஒளித் தெறிப்பு சுட்டியை, எண்ணெய் போன்ற ஒளித் தெறிப்பு சுட்டியை மாற்றக் கூடிய திரவத்தினால் பூச்சிடும் போது, அப் பொருளை நீங்கள் பார்வையிலிருந்து மறைத்துவிட முடியும்.*

**தாரண்யா**

*இயற்கையில் காணப்படும் சில மீன்வகைகள், கணவாய்கள் என்பனவற்றின் உடலில் லியூகோ போர் கலங்கள்(LEUCOPHORE CELLS) எனப்படும் கலங்கள் உள்ளன. இக்கலங்கள் ரிஃப்லெக்ட்டின் ஏ1 (REFLECTIN A1) எனும் புரதத்தை கொண்டுள்ளன. இவை கண்ணால் பார்க்கக் கூடிய ஒளி நிறமாலையின் அளவை மாற்றவல்லன. பொதுவாக, இந்த உயிரினங்கள் பால் வெண்மையாக இருக்கும், ஆனால் அவற்றின் மீது படும் ஒளி அலைகள் சிதறடிக்கப்பட்டு பரவ வைப்பதன் மூலம் அவற்றின் சூழலில் இருந்து பிரித்தறிய முடியாத ஓர் தோற்றத்தை ஏற்படுத்துகின்றன.*

*கலிபோர்னியாவில் இருந்து அலாஸ்கா வரை பசிபிக் பகுதியில் காணப்படும் ஒரு வகை*



*கணவாயில் காணப்படும் வானவில்லை ஒத்த ஒளி நிற பிறழ்ச்சியை ஏற்படுத்த கூடிய ஓர் புரதத்தை பயன்படுத்தி, விஞ்ஞானிகள் சமீபத்தில் மனித சிறுநீரக செல்களின் ஒளித் தெறிப்பு சுட்டியை மாற்ற ஒரு வழியை கண்டு பிடித்தார்கள். இவ்வகை புரத கூறுகளை மனித சிறுநீரகங்களினுள் செலுத்தும் போது அவர்கள் வெற்று கண்ணுக்கு தெரியாத சிறுநீரக கலங்களை அவதானித்தார்கள், அத்துடன் அக்கலங்களில் பிரசாரண அமுக்கத்தை வெவ்வேறு செறிவுள்ள சாதாரண உப்புகரைசலை செலுத்தி மாற்றும் போது இம்மாற்றம் அதிகம் தெரிவதையும் அவதானித்தனர்.*

*இந்த ஆய்வுகளின் அடிப்படையில் இனங்காணப்பட்ட புரத கூறுகளை மனித தோல் கலங்களினுள் செலுத்துவதன் மூ லம் அவற்றின் ஒளித் தெறிப்பு சுட்டியை மாற்ற முடியும் எனவும் அதை பயன்படுத்தி எதிர்காலத்தில் மனித தோலில் ஏற்படும் தழும்புகளை மறைக்கவும், அழகூட்டும் ஒப்பனை முறைகளையும் மேற்கொள்ள முடியும் என இவ் விஞ்ஞானிகள் நம்புகின்றனர். அது மட்டுமன்றி இவ்வாராய்ச்சிகளின் பயனாக எதிர்காலத்தில் முழு மனித தோலையும் மாற்றத்திற்கு உட்படுத்த முடிந்தால் அம்மனிதனை கண்ணுக்கு புலப்படாதவனாக மாற்றுவதும் சாத்தியமென அலன் கொரோடெஸ்கி நம்புகிறார். "நாம் மனித தோலை, அதன்கண்ணுக்குபுலப்படும்தோற்றத்தை மாற்ற முடியும் என்று நாம் நம்புகிறோம், அதனை கணவாயின் தோலுக்கு ஒப்பான ஒளித் தெறிப்பு சுட்டி கொண்டதாக மாற்றுவோமாயின், இது சாத்தியமாகும், ஆனால் அது மிகவும் சவாலான, மிகவும் கடினமான திட்டம்" என்கிறார் அவர். "நாம் மிகவும் ஆரம்ப கட்டத்திலேயே இருக்கிறோம், ஆனால் ஓர் வழியுள்ளது என்ற தகவல் எமக்கு உற்சாகத்தையும் ஒவ்வொரு நாளையும் உற்சாகத்துடன் தொடங்கவும் எமது இலக்கை நோக்கி உழைக்கவும் வைக்கிறது" என்று தன்னம்பிக்கையுடன் கூறுகிறார்.*

*இறுதி இலக்கு பெரியது என்றாலும், எதிர்காலத்தில் அதனை எட்ட நாம் பாடுபட வேண்டும் என அவர் கூறுவது கண்காணா மனிதனை உருவாக்குவதற்கு மட்டுமல்ல கண்காணாமல் விடப்பட்ட எம்மினத்துக்கும் ஓர் பாடமாக கொள்வோம்.*

• • •